மில்க்வைற்
நீலசோப்
25 மேலுறைகளுக்கு
திருவள்ளுவர் படம்
மில்க்வைற்
தொழிலகம்
(இ579)

பக்கங்கள்: ஆறு

Registered as a NewsPaper

# உதயன்

விலை ரூபா 5-00

மில்க்வைற்
சலவைத்தூள்
அவசர உலகில்
திடீர் சலவைக்கு
25 வெற்றுப் பக்கெற்றுக்கு
அப்பியாசக் கொப்பி
மில்க்வைற்
தொழிலகம்
(இ579)

சுடர் 10 திருவள்ளுவர் ஆண்டு 2026 மாசி 13 சனிக்கிழமை (25 – 02 – 1995) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 93

# பெரும் படை நடவடிக்கைக்கு தயாராகின்றார் ராணுவத் தளபதி

## சிப்பாய்களுக்கு தீவிர பயிற்சி

கொழும்பு, பெப்ரவரி 25

இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் ஜெரி டி சில்வா தலைமையில் பெரும் போர் ஒன்றை நடத்துவதற்கு இராணுவம் தயாராகி வருகின்றது.

கொழும்பு செய்தி வட்டாரங்கள் இத்தகவலைத் தெரிவித்தன.

ஒரு புறம் போர் இடை நிறுத்தத்தை ஏற்படுத்தி விடுதலைப் புலிகளுடன் சமாதானப் பேச்சு நடத்திவருவதாகக் காட்டிக் கொண்டிருக்கும் ஸ்ரீலங்கா அரசு மறுபுறத்தில் பெரும் இராணுவ நடவடிக்கைக்கு படைகளைத் தயார் செய்து வருகின்றது.

இதற்காக இராணுவத்துக்கு இறுக்கமான கட்டளைத் துறைப்பயிற்சியை வழங்குவதிலும்—

இராணுவத்தை உயர் தர போரிடும் திறனைக் கொண்டதாக மாற்றி அமைக்கும் நடவடிக்கையிலும் இராணுவத்தளபதி ஜெரி டி சில்வா ஈடுபட்டிருப்பதாகவும் செய்தி நிறுவனங்கள் மேலும் தெரிவித்தன.

சாதாரண போக்குவரத்துக்கு

## பூநகரி, ஆனையிறவுப் பாதைகள் திறக்கப்பட்டதாக அரசு அறிவிப்பு

கொழும்பு, பெப். 25

பூநகரி — சங்குப்பிட்டிப் பாதை, ஆனையிறவுப்பாதை இரண்டையும் சதாரண போக்குவரத்திற்கு திறந்துவிடுவதென்று அரசாங்கம் தீர்மானித்திருப்பதாக ஜனாதிபதி செயலகம் நேற்று அறிவித்தது.

ஜனாதிபதியின் செயலாளர் கே. பாலபட்டபெண்டி விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் திரு. சு. ப. தமிழ்ச்செல்வனுக்கு சற்றுமுன் அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் இந்தத் தகவல் கூறப்பட்டிருந்ததாகவும் அந்தச் செய்திக்குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டது.

எனினும் நேற்றிரவுவரை அத்தகைய கடிதம் ஏதும் யாழ்ப்பாணத்தில் விடுதலைப் புலிகளின் தலைமைப் பீடத்துக்குக் கிடைக்கவில்லை என சம்பந்தப்பட்ட வட்டாரங்கள் தெரிவித்தன.

ஜனாதிபதி செயலகச் செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:—

வடபகுதிக்கு மேலும்போக்குவரத்து வசதிகள் வழங்குவதற்காக அரசாங்கம் இந்த

(6ஆம் பக்கம் பார்க்க)

## பாதை திறப்புப் பற்றிய அரசின் அறிவிப்பை புலிகள் நிராகரிப்பர்?

கொழும்பு, பெப். 25

பூநகரி — சங்குப்பிட்டி மற்றும் ஆனையிறவுப் பாதைகள் திறப்பது தொடர்பாக அரசுத் தரப்பு நேற்று வெளியிட்ட அறிவிப்பை தமிழீழ விடுதலைப் புலிகள் ஏற்க மாட்டார்கள் என எதிர் பார்க்கப்படுகிறது.

வடபகுதிக்கு பாதுகாப்பான போக்குவரத்து பாதையைத் திறப்பது தொடர்பாக — அரசு — விடுதலைப் புலிகள் பிரதிநிதிகள் இடையே கடந்த மூன்று சுற்று சமாதானப் பேச்சுக்களின் போதும் விடுதலைப் புலிகள் வலியுறுத்திய விடயங்கள் குறித்து தகவல் ஏதும் வெளியிடாமல், அவற்றைப் புறக்கணித்துவிட்டு, தன்பாட்டில் பாதை திறப்புக் குறித்து அரசு அறிவித்திருப்பதை புலிகள் ஏற்கமாட்டார்கள் என்று கருதப்படுகின்றது.

பூநகரிப் பாதையைத் திறப்பதற்கு வசதியாக பூநகரி படை முகாமை முற்றாக வாபஸ் பெற வேண்டும் என்றும் —

அவ்வாறு வாபஸ் பெற்று அச்சுறுத்தல் ஏதுமின்றி பொதுமக்களின் போக்குவரத்துக்கு பூநகரி பாதையைத் திறந்து விட்டால், ஆனையிறவு முகாம் ஊடான பாதையையும் திறந்து விட இணங்க முடியும் என்றும் —

(6 ஆம் பக்கம் பார்க்க)

## இளம் பெண்கள் மீது சேஷ்டை; இளைஞர் பலர் கைதாகினர்

யாழ்ப்பாணம், பெப். 25

இளம் பெண்கள் வீதிகளால் பயணம் செய்யும்போது அவர்கள் மீது பகிடியும், அங்க சேஷ்டையும் விடும் சம்பவங்கள் யாழ். நகரப் பகுதியில் அதிகரித்து வருவதாக முறையிடப்படுகிறது.

மிகக் குறிப்பாக சைக்கிளில் காலையிலும், பொழுது சாயும் வேளையிலும் "ரியூசனுக்கு" சென்று வரும் மாணவிகள் மீதும், மாலையில் அலுவலகங்களில் இருந்து வீடு செல்லும் யுவதிகள் மீதும் இளைஞர்கள் இவ்விதஒவ்வாத நடவடிக்கையில் ஈடுபடுவதாக பெற்றோர்கள் குறைப்படுகின்றனர்.

இவ்வாறு மாணவிகள், இளம் பெண்கள் மீது சேஷ்டை விடுவோரை கைது செய்யும் நடவடிக்கை தீவிரப் படுத்தப்பட்டுள்ளதாக தமிழீழ காவல்துறை வட்டாரங்கள் தெரிவித்தன.

காவல்துறையினர் மேற்கொண்ட நடவடிக்கையின் பயனாக, நேற்று முன்தினம் மாலை மட்டும் யாழ் நகரப் பகுதியில் 6 இளைஞர்கள் கைது செய்யப்பட்டதாகவும்—

பின்னர் அவர்கள் எச்சரிக்கப்பட்டு விடுவிக்கப்பட்டதாகவும்— தெரிவிக்கப்பட்டது.

நேற்றுக்காலை "ரியூசனுக்குச் சென்ற மாணவிகள் மீது சேஷ்டை விட்ட ஒருவரும் கைது செய்யப்பட்டார்

சேஷ்டை விடும் செயலில் ஈடுபடும் குழு ஒன்றின் முக்கிய நபர் இவர் என்று தெரிவிக்கப்பட்டது.

நேற்று மாலையும் இது போல் சில இளைஞர்கள் காவல்துறையினரால் கைது செய்யப்பட்டனர். [அ-3-7]

## ஐ. தே. க. காலத்தில் பயிலுநர்களாக சேர்ந்த 8 ஆயிரம் பேருக்கு 'கல்தா'!

கொழும்பு, பெப். 25

ஐ. தே. கட்சியின் ஆட்சிக் காலத்தில் பயிலுநர்களாக சேர்ந்த 8 ஆயிரம் பேருக்கு பதவி நீக்க உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்படுகிறது.

பல்வேறு அரச திணைக்களங்களிலும், கூட்டுத்தாபனங்களிலும் பயிற்சியாளர்களாக சேர்ந்து, ஆறு மாதகால முதல் 3 வருடங்கள் வரை பயிற்சியாளர்களாகவே கடமையாற்றிய சுமார் 8 ஆயிரம் பேரையும் வேலையில் இருந்து அடுத்த மாதம் முதல் நிறுத்தி வைக்குமாறு பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சு சுற்று நிருபம் மூலம் உத்தரவு பிறப்பித்துள்ளது.

இதனால் வேலை இழக்கும் பயிற்சியாளர்கள் இணைந்து தமக்கென சங்கம் ஒன்றை அமைத்துள்ளனர் என்றும்—

தமக்கு வேலை வழங்க வேண்டும் என்றும் கோரி ஜனாதிபதிக்கு அவர்கள் மகஜர் அனுப்பியுள்ளனர் என்றும் கொழும்புச் செய்திகள் தெரிவித்தன. (உ-3)

சந்திரிகா மீது அவதூறு:

## பத்திரிகை ஆசிரியருக்கு எதிராக மானநஷ்ட வழக்கு

கொழும்பு, பெப். 25

ஜனாதிபதி சந்திரிகாகுமாரதுங்காவை அவதூறு செய்யும் விதத்தில் எழுதியதாகக் கூறப்படும் குற்றச்சாட்டு தொடர்பாக 'சண்டே ரைம்ஸ்' ஆசிரியர் சிங்க ரட்ணதுங்க மானநஷ்ட வழக்கை எதிர்நோக்க வேண்டியிருக்கும் என்று பொலீஸ் வட்டாரங்கள் தெரிவித்தன.

மேற்படி விடயம் தொடர்பாக ஜனாதிபதி சந்திரிகா தெரிவித்த முறைப்பாட்டின் பேரில் சிங்க ரட்ணதுங்க கடந்த புதன்கிழமை நாலாவது மாடியில் வைத்து 3 மணி நேரம் விசாரணை செய்யப்பட்டிருந்தார் என்பது தெரிந்ததே. (உ-3]

## "கோமாரி" கப்பலுக்கு பதிலாக "லங்கா முடிதா"!

யாழ்ப்பாணம், பெப். 25

யாழ். மாவட்ட மக்களுக்கான நிவாரணப் பொருள்களை எடுத்து வருவதற்காக "லங்கா முடிதா" [LANKA MUDITHA] என்ற கப்பல் அடுத்த மாதம் முதல் சேவையில் ஈடுபடுத்தப்படவிருக்கிறது.

தற்சமயம் நிவாரணப் பொருள்களை எடுத்து வரும் சேவையில் ஈடுபடும் "கோமாரி" கப்பலுக்கு பதிலாகவே இக் கப்பல் சேவையில் ஈடுபடவிருக்கிறது.

கொழும்பு துறைமுகத்தில் பொருள்கள் ஏற்றும் பணியில் தற்போது ஈடுபட்டுள்ள இக்கப்பல் அடுத்த மாத முற்பகுதியில் பருத்தித்துறைக்கு வந்து சேரும் என்றும் —

இக் கப்பலுக்கு செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழு பாதுகாப்பு வழங்கும் என்றும் — தெரிவிக்கப்பட்டது.

### சீடான்ஸர் கப்பல் சேவை

யாழ்ப்பாணம், பெப். 25

பருத்தித்துறைக்கும் திருமலைக்கும் இடையே சேவையில் ஈடுபடும் 'சீடான்ஸர்' கப்பல் அடுத்தமாதம் முதலாம் திகதியே பருத்தித்துறைக்கு வரும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இன்று நடைபெறுவதாக இருந்த இக்கப்பல் சேவை பின்னர் நிறுத்தப்பட்டது தெரிந்ததே.

### தபால்கள் இன்று விநியோகம்

வடமராட்சி, பெப். 25

"மாஹோ" கப்பலில் எடுத்து வரப்பட்ட தபால்கள் இன்று முதல் பொது மக்களுக்கு விநியோகிக்கப்படவுள்ளன.

கப்பலில் எடுத்து வரப்பட்ட 330 தபால் பொதிகளும் கப்பலில் இருந்து இறக்கப்பட்டு நேற்றிரவு யாழ் பிரதம தபாலகத்துக்கு எடுத்து வரப்பட்டன.

கடந்த 16 ஆம் திகதி வரை முத்திரையிடப்பட்ட சகல தபால்களும் இம்முறை இங்கு எடுத்துவரப்பட்டுள்ளன

(ஐ-173]

### பென்சன் வவுச்சர்கள்

யாழ்ப்பாணம், பெப் 25

யாழ். மாவட்ட ஒய்வூதியர்களின் இம் மாதத்துக்கான (பெப்ரவரி) ஓய்வூதிய வவுச்சர்கள் நேற்று யாழ் செயலகத்துக்கு வந்துசேர்ந்தன.

கடந்த ஞாயிறன்று வந்து சேர்ந்த 'மாஹோ' கப்பலில வவுச்சர்கள் இங்கு எடுத்து வரபபட்டிருந்தன.

(ஐ-100-173)

முச்சந்தி முரஸ்



அப்ப எல்லாரும் எதிர்ப் [illegible]

வெளிநாடு சென்ற

## ஊழல் பேர்வழிகள் நாடு கடத்தப்படுவர்

கொழும்பு, பெப். 25

முன்னைய அரசின் காலத்தில் ஊழல் நடவடிக்கைகளில் ஈடுபட்டு பின்னர் புதிய அரசு பதவிக்கு வந்ததும் வெளிநாடுகளுக்குத் தப்பிச்சென்ற அரசு உயர் அதிகாரிகளை — அவர்களாகவே தாயகம் திரும்பி வராத பட்சத்தில் — இலங்கைக்கு நாடுகடத்த நடவடிக்கை எடுப்பது என்று அரச வட்டாரங்களில் தீர்மானிக்கப் பட்டிருப்பதாகத் தெரியவருகிறது.

வெளிநாடுகளில் இருந்து பஸ் கொள்வனவு செய்ததில் இடம்பெற்ற மோசடி மற்றும் முன்னைய அரசின் கீழ் இடம்பெற்ற நிதி விவகாரங்களில் முக்கிய பங்கு வகித்த அரச உயர் அதிகாரிகள் இருவர் இப்போது ஐரோப்பாவில் தங்கியுள்ளனர் என்றும்—

இவர்கள் தாங்களாக நாடு திரும்பாவிடில் அவர்களை நாடுகடத்த தேவையான நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் தெரிவிக்கப்படுகிறது. [ஐ-எ]

செஞ். சர்வதேசக் குழுவின்

## யாழ். அலுவலகத்துக்கு தமிழ் பேசும் அதிகாரி

யாழ்ப்பாணம், பெப். 25

செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவின் யாழ் அலுவலகத்தில் பொதுமக்கள் தொடர்புப் பிரிவில் கடமையாற்ற தமிழில் பேசக்கூடிய வெளிநாட்டு பிரதிநிதி ஒருவர் நியமிக்கப்படவுள்ளார்.

செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவின் காணாமற் போனோர், தேடுதல் பிரிவில் அவர் பணியாற்றுவார்.

திரு. ஜேம்ஸ் றெனோல்ட் என்ற அந்தப் பிரதிநிதி தற்சமயம் மட்டக்களப்பில் உள்ள செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக்குழு அலுவலகத்தில் பணியாற்றி வருகிறார்.

இம்மாத இறுதியில் அவர்

(6 ஆம் பக்கம் பார்க்க)

தமிழகப் பத்திரிகைகள் தகவல்:

## பதவி விலக முயன்றார் ராவ்! தடுத்தார் சோனியா!!

சென்னை. பெப் .25

இந்திரா காங்கிரஸ் கட்சிக்குள் ஏற்பட்ட நெருக்கடி முற்றியதை அடுத்து கட்சித் தலைவர் பதவியில் இருந்து விலக பிரதமர் நரசிம்மராவ் முன்வந்தார் என்று தற்போது செய்திகள் வெளியாகியுள்ளன.

இது தொடர்பாக முன்னாள் இந்தியப் பிரதமர் ராஜிவின் மனைவியான சோனியா காந்தியிடம் தமது இராஜினாமாக் கடிதத்தை ராவ் சமர்ப்பித்து புதிய பிரதமர் ஒருவரைத் தெரிவு செய்து கொள்ளும்படி கோரினார் என்றும்—

ஆனால் அக்கடிதத்தை

[6 ஆம் பக்கம் பார்க்க]

## மேற்கு நாட்டு ராஜதந்திரிகள் குழு அடுத்த மாதம் யாழ்ப்பாணம் வரும்

யாழ்ப்பாணம், பெப் 25

மேற்கு நாட்டு ராஜதந்திரிகள் 10 பேர் அடங்கிய குழு ஒன்று அடுத்த மாதம் 7 ஆம் திகதி யாழ்ப்பாணம் வரவுள்ளது.

செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவின் ஏற்பாட்டில் இவர்களது விஜயம் இடம் பெறவுள்ளது.

விமானம் மூலம் பலாலிக்கு வரவுள்ள இவர்களை "சீடான்ஸர்" கப்பல் மூலம் பருத்தித்துறைக்கு அழைத்து வர விசேட ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

தற்சமயம் ஜெனீவாவில் தங்கியுள்ள செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவின் யாழ். வதிவிடப் பிரதிநிதி செல்வி மேரி பேர்கின்ஸ் மேற்படி ராஜதந்திரிகள் குழுவை அங்கிருந்து யாழ்ப்பாணத்துக்கு கூட்டி வருவார் என்று தெரிவிக்கப்படுகிறது.

மேற்படி குழுவினர் யாழ்ப்பாணத்தில் தங்கியிருக்கும் போது நிலைமைகளை நேரில் அவதானிப்பர். விடுதலைப் புலிகள் பிரதிநிதிகளையும் அவர்கள் சந்திப்பர்.

வெளிநாட்டு ராஜதந்திரிகள் பலர் அடங்கிய குழு ஒன்று யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்வது கடந்த 10 ஆண்டுகளின் பின் இதுவே முதல் முறை என்பது குறிப்பிடத்தக்கது.

[ஐ-3]

## இலங்கைக்கு உதவும் நாடுகளின் கூட்டம் ஏப்ரல் மாதத்தில் நடக்கும்

கொழும்பு, பெப். 25

இலங்கைக்கு உதவும் நாடுகளின் வருடாந்தக் கூட்டம் பெரும்பாலும் எதிர்வரும் ஏப்ரல் 27,28 ஆம் திகதிகளில் பிரெஞ்சுத் தலைநகர் பாரிஸில் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஆண்டு இதே காலப் பகுதியில் நடைபெறவிருந்த இக்கூட்டம் முன்னைய அரசினால் மேற்கொள்ளப்பட்ட பிரச்சினைக்குரிய 'எயர்பஸ்' கொள்வனவு மற்றும் பொதுத் தேர்தல், ஜனாதிபதித் தேர்தல் என்பன காரணமாக உலக வங்கியினால் ரத்துச் செய்யப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை உலக வங்கியின் இலங்கை வதிவிடப் பிரதிநிதி திரு ரொபர்ட் பென்வோட்டின் தகவலின்படி இனப்பிரச்சினைக்கு தீர்வு காணப்படாத நிலையில் கஷ்டமான பொருளாதார நிலைவரங்களை அனுபவிக்கும் உதவும் நாடுகளிடமிருந்து பெரியளவிலான நிதிஉதவியை இலங்கை அரசு எதிர்பார்க்க முடியாது என்று தெரிவிக்கப்படுகிறது.

இலங்கை அரசு விடுதலைப் புலிகளுடன் எதிர்வரும் ஏப்ரலுக்கு முன்பு சமாதான

( 6ஆம் பக்கம் பார்க்க)

## இணக்கம் காணப்படும் விடயங்கள் பகிரங்கமாக வெளியிடப்படும்

அமைச்சர் அனுருத்த தெரிவிப்பு

கொழும்பு, பெப். 25

விடுதலைப் புலிகளுடன் இணக்கம் காணப்படும் விடயங்கள் அனைத்து அரசியல் கட்சிகளுக்கும் நாட்டு மக்களுக்கும் பகிரங்கமாக வெளியிடப்படும்.

பாதுகாப்பு பிரதிஅமைச்சர் ஜெனரல் அனுருத்தரத்வத்தை முன்கண்டவாறு தெரிவித்தார்.

பாதுகாப்பு அமைச்சுக்கான நிதி ஒதுக்கீடு பற்றிய குழுநிலைவிவாதத்தின்மீது நடந்த விவாதத்துக்கு பதிலளித்துப் பேசிய போது அவர் முன்கண்டவாறு தெரிவித்தார்.

இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வுகாண அரசாங்கம் மனப்பூர்வமாக உறுதிகொண்டுள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.

விடுதலைப் புலிகளுடன் நடத்தப்படும் பேச்சுகள், செய்து கொள்ளப்பட வேண்டிய ஒப்பந்தங்கள் அனைத்தும் பகிரங்கமாக வெளியிடப்படும். மக்களிடமிருந்தோ, அரசியல் கட்சிகளிடம் இருந்தோ எதுவும் மறைக்கப்படமாட்டாது பேச்சுவார்த்தைகள் தற்சமயம் நம்பிக்கை

(6 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வீரவேங்கை
கஸ்ரோ
(இயல்வாணன்)
ஞாபகார்த்தமாக

சுன்னாகம் இ. சுப்பிரமணியம்
மிதிவண்டி விற்பனையகத்தினர்
நடத்தும்

## ★ இலங்கை மண் ★

(புலிகளின் குரல் தொடர் நாடகம்)
கலைஞர்களுக்கான

## பாராட்டு விழாவும் ஆய்வரங்கமும்

இடம்:
நல்லூர் இளங்கலைஞர் மண்டபம்
காலம்:
26 – 02 – 1995 ஞாயிற்றுக்கிழமை
மாலை 4–00 மணி

★ தலைமை
திரு. வெ. இளங்குமரன் அவர்கள்
(பொறுப்பாளர் தமிழீழக் கல்விக் கழகம்)

★ முதன்மை விருந்தினர்
திரு. சி. கரிகாலன் அவர்கள்
(அரசியல்துறை துணைப் பொறுப்பாளர் தமிழீழம்)

★ சிறப்பு விருந்தினர்கள்
திரு. சி. இளம்பரிதி அவர்கள்
(அரசியல்துறைப் பொறுப்பாளர் யாழ். மாவட்டம்)
வைத்திய கலாநிதி சி. சிவபாலன் அவர்கள்
(தலைவர் நோயாளர் நலன்புரி சங்கம்)

### நிகழ்ச்சி நிரல்

★ மங்கல விளக்கேற்றல்
திரு. தமிழன்பன் அவர்கள்
(பொறுப்பாளர், நிதர்சனம்)
★ அமைதி வணக்கம்
★ தமிழ்த்தாய் வாழ்த்து
திரு. பொன். சுந்தரலிங்கம் அவர்கள்
★ வரவேற்புரை
திரு. சு. சோமசுந்தரம் அவர்கள்
★ தலைமையுரை
★ முதன்மை விருந்தினர் உரை
★ சிறப்பு விருந்தினர் உரை
★ வாழ்த்துரை
இயலிசைவாரிதி என். வீரமணி ஐயர் அவர்கள்
★ கருத்துரைகள்
பேராசிரியர் அ. சண்முகதாஸ் அவர்கள்
திரு. வே. பாலகுமாரன் அவர்கள்
திரு. சி. சிவமகாராசா அவர்கள்
(தலைவர், வலி. வடக்கு செஞ்சிலுவைச் சங்கம்)
★ கலைஞர் கௌரவம்
திரு. சி. கரிகாலன் அவர்கள்
(அரசியல்துறை துணைப்பொறுப்பாளர் தமிழீழம்)

### 'நடிப்பும் ஆய்வும்'

'இலங்கை மண்' கலைஞர்கள் வழங்கும்
(தொடர் நாடகத்தின் சிலபகுதிகள்)

★ ஆய்வுரைகள்
சைவப்புலவர் சி. செல்லத்துரை அவர்கள்
திரு. கோ. சி. வேலாயுதம் அவர்கள்
(பிரதிக் கல்விப் பணிப்பாளர்)
செல்வி கலாநிதி சண்முகநாதபிள்ளை
(ஆசிரியை, வேம்படி மகளிர் கல்லூரி)
திரு. புதுவை இரத்தினதுரை அவர்கள்
(பொறுப்பாளர், கலை பண்பாட்டுக் கழகம், தமிழீழம்)
திரு. இ. ஜெயராஜ் அவர்கள்
(அகில இலங்கை கம்பன் கழக அமைப்பாளர்)
★ பதிலுரை
திரு. பொன். கணேசமூர்த்தி அவர்கள்
('இலங்கை மண்' நாடகாசிரியர்)
★ நன்றியுரை
'வல்வையூரான்'
('இலங்கை மண்' நாடகத் தயாரிப்பாளர்)

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

நன்றி!

இ. சுப்பிரமணியம் மிதிவண்டி
விற்பனை அகம்
சுன்னாகம்.

[சி–677]

---

## யாழ். றோட்டறிக் கழகம்

### அங்கவீனர்களுக்கான இலவச முச்சக்கர வண்டி வழங்கல்

எமது கழகம், மேலும் ஒரு தொகுதி முச்சக்கர வண்டிகளைத் தகுதி வாய்ந்த அங்கவீனமான இரு பாலாருக்கும் வழங்கவுள்ளது. மேற்படி வண்டியைப் பெற்று அதன் மூலம் தமது வாழ்வை மேம்படுத்த விரும்பும் அங்கவீனர்கள், கீழ்க்கண்ட முகவரியில் அதற்குரிய விண்ணப்பப்படிவத்தைப் பெற்று, உரியவாறு பூர்த்தி செய்து எமக்கு அனுப்பி வைக்குமாறு வேண்டுகிறோம்.

விண்ணப்பமுடிவு திகதி:–
1995 மார்ச் 20

தலைவர்,
யாழ். றோட்டறிக் கழகம்

292/2, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

[சி–676]

---

### நடுக்கட்டப்பட்ட பொருள்கள்

## ஏல விற்பனை

25-02-95 ஆகிய இன்று நடைபெறவிருந்த ஏல விற்பனை தவிர்க்க முடியாத காரணத்தால் இன்றைய தினம் நடைபெறவில்லை என்பதை அறியத் தருவதோடு எதிர்வரும் சனிக்கிழமை 04-03-95க்கு நியமிக்கப்பட்டுள்ளது என்பதையும் அறியத்தருகின்றோம்.

04-03-95 அன்று நடக்க இருக்கும் ஏலவிற்பனையில் வீடடுத்தளபாடங்கள், துவிச்சக்கர வண்டி, இரண்டு ஆட்டுக்கடா என்பன ஏலத்தில் விடப்படும். 04-03-95க்கு முன் குறித்த வழக்குகளில் சம்பந்தப்பட்டவர்கள் தீர்ப்பில் சொல்லப்பட்ட பணத்தைச் செலுத்தி மீட்காவிடில் 04-03-95 சனிஅன்று ஏலத்தில் விடப்படும்.

நன்றி

பதிவாளர்,
தமிழீழ மாவட்ட நீதிமன்று,
பருத்தித்துறை.

(சி/678)

---

## மாதாந்த அறிவியலரங்கு-II

காலம்: நாளை 26 - 02 - 1995 பி.ப 3மணி
இடம்: உசன் இராமநாதன் மகாவித்தியாலயம்
தலைப்பு:
### புவிநடுக்க அனர்த்தங்கள்
நிகழ்த்துபவர்:
திரு. எஸ். ரி. பி. இராஜேஸ்வரன்
[முதுநிலை விரிவுரையாளர் – புவியியல் துறை யாழ். பல்கலைக்கழகம்]

அறிவுத் தேடல் மிக்கோர் வருக

நூலக அபிவிருத்திச் சபை
சாவ/பிரதேச சபை பொது நூலகம்,
உசன், மிருசுவில்.

விளம்பர உதவி:
சிறீ வெற்றிலைக் கடை
சந்தை உட்புறம், கொடிகாமம்.
[35379]

---

உ
யாழ். வண்ணை
வைத்தீஸ்வரன் கோவில்
(வண்ணை சிவன்)

## சுவாமி மஹோற்சவ விஞ்ஞாபனம்

| | |
|---|---|
| கொடியேற்றம்: | 27 — 02 — 1995 திங்கள் பகல் 12 மணி |
| சப்பரம்: | 14 — 03 — 1995 செவ்வாய் இரவு 7 மணி |
| தேர்த்திருவிழா: | 16 — 03 — 1995 வியாழன் பகல் 8–30 மணி |
| தீர்த்தத் திருவிழா | 17 — 03 — 1995 வெள்ளி பகல் 9–30 மணி |
| பூங்காவனம்: | 18 — 03 — 1995 சனி பி. பகல் 6–00 மணி |

சிறப்புச் சொற்பொழிவு மாலை 6–7மணி
27 - 02 - 1995 முதல் 07 - 03 - 1995 வரை
திரு. சிவ. மகாலிங்கம் B. A. அவர்கள்
08 - 03 - 1995 — 15 - 03 - 1995
திரு செ. சத்தியமூர்த்தி B. Sc.
16 - 03 - 1995 — 17 - 03 - 1995
திரு. கனகசபாபதி —நாகேஸ்வரன் M. A.

சிவராத்திரி சிறப்பு நிகழ்வுகள்
27 — 02 — 1995
இரவு
10-00 — 12 00 மணி
இசைச் சொற்பொழிவு — திரு. க. ஆனந்தராசா
12-00 — 2-00 மணி
பண்ணிசைக்கச்சேரி— திரு. S.R. திருஞானசம்பந்தர்
2-00 — 4-00 மணி
இசைக்கச்சேரி — திரு. S ...

[சி-393] ... தேவஸ்தானம்.

---

## வணிக ஊழியர் கூட்டம்

யாழ்ப்பாணம், பெப். 25
யாழ். வணிக ஊழியர் சழகத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் இன்று சனிக்கிழமை பிற்பகல் 3மணிக்கு கொட்டடி நமசிவாயவித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது. (ஐ)

## திறந்த பல்கலை. மாணவர்களுக்கு

யாழ்ப்பாணம் பெப் 25
திறந்த பல்கலைக்கழக — 94–95 கல்வியாண்டு வணிக முகாமைத்துவ கற்கை நெறிக்கான நாள் வகுப்பு நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 8. 30 மணிக்கு நடைபெறும் எனவும் —

பட்டமேற்கல்வி டிப்புளோமா 94 –95 கல்வியாண்டு கற்கை நெறிக்கு பதிவு செய்த மாணவர்கள், தமக்குரிய பாட நூல்களையும், ஒப்படை வினாக்களையும் நாளை பிற்பகல் 1 மணிக்கு பதிவுப் புத்தகத்துடன் வந்து பெற்றுக் கொள்ளலாம் என்றும் — திறந்த பல்கலைக்கழக பிராந்திய இயக்குநர் திரு ச. ஆ. ஞானேந்திரன் அறிவித்துள்ளார். (ஓ–14)

## தீவக மக்கள் விவரம் திரட்டும் பணி

யாழ்ப்பாணம், பெப். 25
பாதிக்கப்பட்ட தீவக மக்களின் விவரம் திரட்டும் பணி இன்று சனிக்கிழமை முதல் 3 நாட்களுக்கு நடைபெறும்.

வேலணை பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட வேலணை, மண்கும்பான், மண்டைதீவு, அல்லைப்பிட்டி, பகுதி மக்கள் ஆச்தியடியில் அமைந்துள்ள இடம்பெயர்ந்த தீவக மக்கள் நலன் காக்கும் சமூக தலைமைக்காரியாலயத்திலும்—

புங்குடுதீவு மண்டைதீவு. கிழக்கு கிராமசேவகர் பிரிவு மக்கள் பிறவுண் வீதியிலுள்ள புங்குடுதீவு மகாவித்தியாலயத்திலும் (இன்றும் நாளையும் மட்டும்) தங்கள் விவரங்களைப் பதிவு செய்யும்படி கேட்கப்பட்டுள்ளனர் (ஓ–14)

## தமிழ்மொழி திறன் தேர்வு

யாழ்ப்பாணம், பெப் 25
அகில இலங்கைத் தமிழ் மாமன்றம் நடத்தும், ஆண்டு 6 தொடக்கம் ஆண்டு 11 வரையான பாடசாலை மாணவர்களுக்கு இடையேயான தமிழ் மொழித் திறன் தேர்வு இன்று சனிக்கிழமை காலை 9 மணிக்கு 15 நிலையங்களில் நடைபெறும். (ஓ-14)

## கல்வி டிப்புளோமா பயிற்சி நெறி

யாழ்ப்பாணம், பெப், 25
தேசிய கல்வி நிறுவக கல்வி டிப்புளோமா பயிற்சி நெறியில் கடந்த சனிக்கிழமை நடைபெற இருந்த அமர்வுகள் — இன்று சனிக்கிழமையும் நாளை ஞாயிற்றுக்கிழமையும் கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியில் நடைபெறும்.

அன்றைய தினமே வலயம் இரண்டைச் சேர்ந்த சகல பட்டதாரிப் பயிலுநர்களையும் அபிவிருத்தி உதவியாளர்களையும் மேற்படி நிலையத்திற்கு வந்து சிரேஷ்ட விரிவுரையாளரைச் சந்திக்குமாறு கல்விப் பணிப்பாளர் கேட்டுள்ளார். [இ 14]

## மருந்து வகைகள் விநியோகம்

சண்டிலிப்பாய், பெப். 25
யாழ். மாவட்டத்திலுள்ள அரசினர் வைத்தியசாலைகள் அரசினர் மத்திய மருந்துச் சாலைகள் மற்றும் சுகாதார திணைக்கள சிகிச்சை நிலையங்கள் ஆகியவற்றுக்கு இவ்வருட முதலாம் காலாண்டுக்கான மருந்து வகைகள், விநியோகிக்கப்பட்டு வருகின்றன.

யாழ். சுகாதார திணைக்கள மாவட்ட மருந்துக்களஞ்சியப் பிரிவினரால் கடந்த வாரம் தொடக்கம் இந்த விநியோகம் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

சுகாதார திணைக்கள லொறி மூலம் மருந்து வகைகள் நேரடியாக வைத்திய சாலைகளுக்கு கொண்டு சென்று வழங்கப்பட்டு வருவதாக யாழ். சுகாதார திணைக்கள உயரதிகாரி ஒருவர் தெரிவித்தார். (இ–5–135)

---

# சமாதான உடன்பாடு ஏற்படின் அதிக நிதியுதவி

### உலக வங்கி பிரதிநிதி தகவல்

விடுதலைப் புலிகளுடன் சமாதான உடன்பாடு ஒன்றை இலங்கை அரசாங்கம் காணும் பட்சத்தில், ஆகக் கூடிய நிதி உதவியை உலக வங்கி வழங்கும் என்று அறிவிக்கப்படுகிறது.

உலக வங்கியின் பிரதிநிதி ஒருவர் இதனைத் தெரிவித்ததாக கொழும்புப் பத்திரிகைச் செய்திகள் தெரிவித்தன. [ஐ-எ]

## 10 ஆயிரம் பெண்களுக்கு சிங்கப்பூரில் தொழில்

கொழும்பு, பெப். 24
பத்தாயிரம் இலங்கைப் பெண்களுக்கு சிங்கப்பூரில் தொழில் வாய்ப்பு கிடைக்கவிருக்கிறது.

வீட்டுப் பணிப்பெண்களாக இவர்கள் அங்கு வேலைக்கு அமர்த்தப்படுவர் என்று தெரிவிக்கப்படுகிறது.

இதற்கான நேர்முகப்பரீட்சைகள் இவ்வாரம் கொழும்பில் உள்ள வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்திலும் மாத்தறை மற்றும் கேகாலை ஆகிய இடங்களிலும் உள்ள அதன் கிளைகளிலும் நடத்தப்படவுள்ளன.

முதற்கட்டமாக 500 பெண்களுக்கு தொழில் வழங்கப்படும். 6 ஆயிரத்து 800 ரூபா முதல் 7 ஆயிரத்து 600 ரூபா வரை இவர்களுக்கு ஊதியம் வழங்கப்படும்.

நேர்முகப் பரீட்சைகளை நடத்துவதற்காக சிங்கப்பூரில் உள்ள வேலை வாய்ப்பு நிறுவனங்களைச் சேர்ந்த 40 உறுப்பினர்களைக் கொண்ட குழு ஒன்று இன்று வெள்ளிக்கிழமை கொழும்பு வரும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ - எ)

சுன்னாகம்

## மின் உற்பத்தி நிலையத்தை மீள இயங்க வைக்க முயற்சி

யாழ்ப்பாணம், பெப். 25
சுன்னாகம் மின் உற்பத்தி நிலையத்தை மீள இயங்க வைக்கும் நோக்கில் அங்குள்ள ஜெனரேற்றர்களை பார்வையிடுவதற்காக இந்த ஜெனரேற்றர் தயாரித்த பிரிட்டிஷ் 'மேளிஸ்' நிறுவனத்திலிருந்து பொறியியலாளர் குழு ஒன்று விரைவில் யாழ். வரவிருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

சென்ற புதன்கிழமை கொழும்பில் மின்சார சபையின் தலைமைக் காரியாலயத்தில் நடைபெற்ற இது தொடர்பான கூட்டமொன்றில் 'மேளிசை''ச் சேர்ந்த நிபுணர் ஒருவர் பிரிட்டனில் இருந்து வந்து கலந்து கொண்டார்.

அதன் பின்னரே இப்பொறியியலாளர் குழுவினரை யாழ். அனுப்பி வைப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளதாக தெரிய வருகிறது.

தற்போது சுன்னாகம் மின் உற்பத்தி நிலையத்தில் இரண்டாயிரம் கே. வி. ஏ வலுக்கொண்ட 5 ஜெனரேற்றர்களும், ஆயிரம் கே. வி. ஏ. வலுக்கொண்ட 4 ஜெனரேற்றர்களும் இருக்கின்றன.

இவற்றில் இரண்டாயிரம் கே. வி. ஏ. வலுவுடைய 3 ஜெனரேற்றர்களும், ஆயிரம் கே. வி. ஏ. வலுவுடைய 4 ஜெனரேற்றர்களுமாக மொத்தம் 7 ஜெனரேற்றர்கள் இயங்கக்கூடிய நிலையில் இருக்கின்றது. இவற்றில் இருந்து 4 ஆயிரம் கே. வி. ஏ மின்சாரம் பெறக் கூடியதாக இருக்கும்

எனினும் இந்த ஜெனரேற்றர்களை இயக்குவதற்கு தேவையான டீசலை தேக்கி வைக்கும் டீசல் தாங்கிகள் மற்றும் குளிருட்டிகள் விமானக் குண்டுவீச்சுத் தாக்குதல்களால் சேதமடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7-4)

## இரண்டாம் உலக யுத்த முடிவின் 50ஆவது ஆண்டு

அடுத்த மேமாதம் நடைபெறவிருக்கும் இரண்டாம் உலக யுத்த முடிவின் 50ஆவது ஆண்டு தினக் கொண்டாட்டத்தில் எலிஸபெத் மகாராணியும் பிரிட்டிஷ் நாடாளுமன்றத்தின் இரண்டு உறுப்பினர்களும் கலந்து கொள்வார்கள்.

ஹிட்லரின் குண்டு வீச்சுக்கும் நெருப்புக்கும் தப்பிய வெஸ்ட்மினிஸ்டர் மண்டபத்தில் இந்த வைபவம் நடைபெறும்.

ஐரோப்பா முழுவதும் நடைபெறவிருக்கும் பல யுத்த முடிவுநினைவுக் கொண்டாட்டங்களில் இதுவும் ஒன்றாக இருக்கும். (க)

## நல்லின புல்வகை நடுகை

விலங்கு வேளாண்துறையை மேம்படுத்தும் செயற்பாட்டின் ஓர் அங்கமாக நல்லின புல் வகைகளான கொமன் கினி, மகுளிகினி, பயோலா ஆகிய புல் விதைகள் வெளிநாட்டிலிருந்து பெறப்பட்டு நடுகை செய்யப்பட்டுள்ளன.

தமிழீழபொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தினரால் காமதேனு விவசாய கால்நடைப் பண்ணையில் பரீட்சார்த்தமாக விதைக்கப்பட்ட இப்புல் வகைகள் தற்போது நல்ல செழிப்பான முறையில் வளர்ந்துள்ளன.

ஏற்கனவே உள்ள நெப்பியர் இனப் புல்லினங்கள் நல்ல தீவனமாக அமைந்துள்ளதாகவும் புதிதாக தருவிக்கப்பட்ட இப்புல்லினங்களையும் மக்கள் மத்தியில் அறிமுகம் செய்யும் நடவடிக்கைகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் செய்திக் குறிப்பொன்று தெரிவிக்கின்றது.

---

## நன்றியுடன் பாராட்டு

எனது தவறவிடப்பட்ட கைப்பையுடன் கூடிய பணம் ரூ5000/-ஐயும் மற்றும் பெறுமதியான பொருள்களையும் கண்டெடுத்து. ஒப்படைத்து உதவிய சந்திரபுரம், உடுவிலைச்சேர்ந்த திரு. குருகுலசிங்கம் அவர்களது நல்ல மனதையும் பயன் கருதாத உதவியையும் பாராட்டி நன்றி தெரிவிப்பதுடன், கும்பளாவளை விநாயகரின் அருள் குருகுலசிங்கம் குடும்பத்தினருக்குக் கிடைக்கப் பிரார்த்திக்கிறேன்.

திரு. சி. சிவசுப்பிரமணியம்
[ஓய்வுபெற்ற கனிஷ்ட அதிபர்]
'மலர் வாசம்'
உடுவில்.
[35378]

---

## அறிவித்தல்

இன்று (25-02-1995) சனிக்கிழமை நடைபெறவிருந்த நல்லூர் சட்டநாதர் ஆலய பரிபாலன சபையின் பொதுக் கூட்டமும் புதிய நிர்வாகத்தெரிவும் தவிர்க்க முடியாத காரணத்தினால் ஒத்திவைக்கப்பட்டுள்ளன.

ம. தவராஜ்
செயலாளர்
ஆலய பரிபாலனசபை

[35374]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலையக மக்களுக்குத் தனியான பிராந்தியசபை அமைய வேண்டும்

## மலையக மக்கள் முன்னணி யோசனை

கொழும்பு, பெப் 25

மலையகத் தமிழர்கள் செறிவாக வாழும் — குறிப்பிட்ட ஐந்து மாவட்டங்களை உள்ளடக்கிய — பிராந்திய சபை ஒன்று அமைக்கப்படவேண்டும் —

அச்சபைக்கு இந்தியாவில் பாண்டிச்சேரி மாநில சட்ட சபைக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரங்கள் வழங்கப்பட வேண்டும் என்று மலையக மக்கள் முன்னணி, அரசமைப்புச் சீர்திருத்தம் தொடர்பான நாடாளுமன்றத் தெரிவுச் குழுவுக்கு சமர்ப்பித்த தமது யோசனையில் தெரிவித்துள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது;

இப்பிராந்திய சபையின் நிர்வாக மொழி அப்பகுதியில் பெரும்பான்மையாக வாழும் மக்களின் மொழியாக இருக்க வேண்டும்.

மலையக மக்களுக்கான பிராந்திய சபையில் அடங்காத ஏனைய பிறதேச மலையக மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அமைப்பையும் இணைத்த பிராந்திய சபையாக இது விளங்கவேண்டும்.

இந்த நாட்டின் சனத்தொகையில் மலையகத் தமிழ் மக்கள் 7 சதவீதமாகும். ஆனால் தற்போது நாடாளுமன்றத்தில் உள்ள 225 எம்.பிக்களில் 10 பேரே மலையக மக்களைப் பிரதிநிதித்துவப் படுத்துகின்றனர். இது 4.4 சதவீதமாகும். 7 சதவீதமான மலையகத் தமிழ் மக்களுக்கு நாடாளுமன்றத்தில் 16 பிரதிநிதிகள் இருக்கவேண்டும்.

தேர்தல் பழைய முறைப்படி நடக்குமானால் உத்தேச பிராந்திய சபையின் தேர்தல் தொகுதி எல்லைகள் மீள் வரையறை செய்யப்படவேண்டும். அவ்வாறான ஏற்பாடுகள் அப்பகுதியில் மலையக தமிழ் மக்களின் பிரதிநிதித்துவத்தைப் பாதிக்காத வகையில் அமையவேண்டும்.

—இவ்வாறு அந்த யோசனையில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

மலையக முன்னணியின் தலைவர் திரு. பெ. சந்திரசேகரன் சந்திரிகா அரசில் பிரதி அமைச்சராக தற்சமயம் பணிபுரிகிறார். (ஒ-எ)


## வேதசிவாகம விழா

இடம்: காயத்ரீ பீடம் - இணுவில்

காலம்: 26-02-95 ஞாயிற்றுக்கிழமை பி. ப. 2-00 மணி

"சிவாகம கிரியாதத்வநிதி"

பட்டம் பெறுபவர்கள்:

1. சிவஸ்ரீ இ. சுந்தரேஸ்வரக் குருக்கள் - உசன் (பிரதமகுரு, துர்க்கையம்மன் தேவஸ்தானம் - தெல்லிப்பழை)
2. சிவஸ்ரீ சாமிசுந்தரேசக் குருக்கள் - தாவடி (பிரதம குரு ,பெருமாள்கோயில், வண்ணை)
3. சிவஸ்ரீ முத்து ஐயந்திநாதக் குருக்கள் - நந்தாவில் (பிரதமகுரு, மனோன்மணி அம்மன் கோயில் - நந்தாவில்)

இந்து மத குருமார் ஒன்றியத்தின் "மஹாசீர்வாத" நூலை இலவசமாக வழங்கி ஆசீர்வதிப்பவர் இந்துமத குருபீடாதிபதி சிவஸ்ரீ ஸ்கந்தசாம்பசிவக் குருக்கள்

இங்ஙனம்:
சிவஸ்ரீ தா. மகாதேவக் குருக்கள்,
தர்மசாஸ்தா குருகுலம்,
இணுவில்.

(35371)



## ஒப்புநோக்குநர்கள்

பத்திரிகையில் பணியாற்றுவதற்கு ஒப்புநோக்குநர்கள் தேவை.

இரண்டு வருடங்களுக்குக் குறையாத வேலை அனுபவமும் தமிழில் மிகுந்த தேர்ச்சியும் ஆங்கில அறிவும் அவசியம்.

பத்திரிகை நிறுவனங்களில் பணிபுரிந்தவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். இரவு நேரப் பணியும் செய்யக் கூடியவர்கள் மட்டுமே விண்ணப்பிக்கவும்.

ஜி. சி. ஈ. உயர்தரத்தில் தமிழ் உட்பட மூன்று பாடங்களில் சித்தி எய்திய 22 — 25 வயதெல்லைக்கு உட்பட்ட ஆண்கள் பயிலுநர்களாகச் சேர்த்துக் கொள்ளப்படுவர்.

பூரண சுய விவரங்களுடனும், சான்றிதழ்களின் பிரதிகளுடனும் 28-02-1995 க்கு முன்னர் விண்ணப்பிக்கவும்.

ஆளணி முகாமையாளர்,
உதயன் வெளியீட்டகம்,
292/2, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

[சி-661]



## முக்கிய அறிவித்தல்

### நல்லூர் வணிகர் கழகம்

மேற்படி கழகத்தின் நிர்வாகசபைத் தீர்மானத்திற்கமைய எமது கழகத்தால் வழங்கப்பட்டு வந்த அன்பளிப்புக்கள் நன்கொடைகள் அனைத்தும் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளதென்பதை அறியத்தருகின்றோம்.

கு. துரைராசா,
செயலாளர்

(சி/673)



## யாழ். றோட்டறிக் கழகம்

சர்வதேச றோட்டறியின் 90ஆவது ஆண்டு நிறைவு

தமிழ்/ ஆங்கில பேச்சுப்போட்டி

இடம்: யாழ். இந்துக்கல்லூரி

காலம்: இன்று 1995-02-25
காலை 8-30 மணி — தமிழ்
பி. ப. 2-30 மணி — ஆங்கிலம்

போட்டியாளர்கள் அனைவரையும் குறிப்பிட்ட நேரத்திற்கு முன் சமுகமளிக்குமாறு வேண்டுகிறோம்.

சகல றொட்டேறியன்களையும், றோட்டறக்ட் உறுப்பினர்களையும் கலந்து கொள்ளுமாறும் வேண்டுகின்றோம்.

— கழகச் சேவை இயக்குநர்.
292/2, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

[சி-675]


### விஜய குமாரதுங்க படுகொலை:

## பொதுமக்களின் உதவியை நாடுகிறது ஆணைக்குழு

கொழும்பு, பெப்.25

விஜய குமாரதுங்காவின் கொலை தொடர்பான விவரங்களை தருமாறு அவரின் கொலை தொடர்பாக விசாரணை மேற்கொண்டு வரும் ஆணைக்குழு பொது மக்களைக் கேட்டுள்ளது-

விஜய குமாரதுங்க கொலை தொடர்பாக முன்னர் பொலீஸார் மேற்சொண்ட விசாரணைகள் தொடர்பான ஆவணங்கள் காணாமற் போயுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டதை அடுத்தே ஆணைக்குழு பொது மக்களிடம் இவ்வாறு கோரிக்கை விடுத்துள்ளது.

இந்தக் கொலையுடன் தொடர்புடைய சாட்சியங்கள் மற்றும் ஆவணங்களை தந்து விசாரணைக்கு உதவுமாறும் ஆணைக்குழு கேட்டுள்ளது. (ஒ-3)

## யமதர்மனாக படத்தில் நடிக்கிறார் பொன்சேகா!

கொழும்பு, பெப். 25

இலங்கையின் முன்னணி நடிகராக விளங்கிய காமினி பொன்சேகா "நரகத்தில் 84ஆயிரம் நிமிடங்கள்"— என்ற சிங்களத்திரைப்படத்தில் யமதர்மராஜனாக நடித்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஐ. தே. க. அரசின் கீழ் நாடாளுமன்ற உபசபாநாயகராக பதவி வகித்த பொன்சேகா பொதுமக்கள் ஐக்கிய முன்னணி அரசின் கீழ் வடக்கு- கிழக்கு மாகாண ஆளுநராக பதவி வகித்து வருகின்றார்.

இச் சிங்களத் திரைப்படத்தை தினேஷ் பிரியசாத் இயக்கிவருகின்றார்.

இப்படத்தின் கதை வருமாறு;

சமூக சேவையாளர்கள் என்று தங்களை அழைத்துக் கொள்ளும் சிலர் கறுப்புச் சந்தை வியாபாரம், போதை வஸ்துக் கடத்தல் மற்றும் துர்நடத்தை போன்றவற்றில் ஈடுபடுகின்றார்கள்.

நரகத்தில் ஆட்சி நடத்தும் யமதர்மராஜன் இப்படியானவர்களுக்குக்கும் தண்டனை வழங்குகின்றார்கள். அவர்களின் உடல்களை இரண்டாக வெட்டி எரிந்து கொண்டிருக்கும் எண்ணெய்க் கொப்பரைக்குள் வீசும்படி யமதர்மராஜன் உத்தரவிடுகின்றார்.

இதனிடையில் யமதர்மராஜன் அடிக்கடி பூமிக்கு விஜயம் செய்து, மனிதர்களைச் சந்தித்து வருகின்றார். தமது 'நரகராஜ்யத்துக்கு' வரக்கூடியவர்கள் என்று கருதப்படும் மனிதர்கள் பற்றிய விவரங்களை தமது விஜயத்தின் போது யமதர்மராஜன் திரட்டுகின்றார்.

நரகலோகத்தில் அவர்களுக்கு என்ன காத்திருக்கிறது என்பதையும் யமதர்மராஜன் மறைமுகமாக பூமியில் உள்ளவர்களுக்கு தெரிவிக்கின்றார்.

இது ஒரு நகைச்சுவை படம் என்று இயக்குநர் பிரியசாத் தெரிவிக்கின்றார். (ஒ-எ)

## சர்வதேச ஆயுத வர்த்தகர்கள் தலைநகர் கொழும்பில் தங்கியுள்ளனர்

கொழும்பு, பெப். 25

சர்வதேச ஆயுத விற்பனையாளர்கள் தற்சமயம் கொழும்பில் உள்ளனர்.

மேற்கண்ட தகவலை தபால், தொலைத்தொடர்பு அமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் பாதுகாப்பு செலவீன ஒதுக்கீடு தொடர்பான விவாதத்தில் பேசுகையில் அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இலங்கையில் சமாதான முயற்சிகள் முன்னெடுக்கப்படும் இந்நேரத்தில் சர்வதேச ஆயுத விற்பனையாளர்கள் இலங்கைவந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

அமைச்சர் நாடாளுமன்றில் பேசுகையில் கூறியதாவது -

ஜனாதிபதி இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கு தீவிர ஆர்வம்காட்டி வருகிறார்.

சில விசமிகள் சமாதான பேச்சுவார்த்தைகளுக்கு ஊறு விளைவிக்கும் விதத்தில் பழையான பிரசாரத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

எமது அரசாங்கம் இதயசுத்தியுடன் சமாதானப் பேச்சுவார்த்தைகளை ஈடுபட்டுள்ளது.

எமது கட்சியில் பிரிவினையை உருவாக்கசிலர்முயற்சிக்கின்றனர். எமது ஒற்றுமையை கூறுபடுத்த முடியாது—இவ்வாறு அவர் கூறினார்.

முன்னாள் அமைச்சர் நந்தா மத்தியூ பேசுகையில்; பாதுகாப்புக்கு ஒதுக்கப்படும் நிதி கூடுதலாக உள்ளது.

நாட்டில் சமாதானம் காணப்பட்டு யுத்தத்துக்கு என ஒதுக்கப்படும் நிதி பொதுமக்களின் அபிவிருத்திக்குப் பயன்படுத்த வேண்டும் — என்றார். (ஒ-3]

## பனை அபிவிருத்தி சபை தலைவர் யாழ். வருகிறார்

### ஆராய்ச்சி நிலையம் செயற்படும்?

யாழ்ப்பாணம், பெப். 25

பனைவள அபிவிருத்திச் சபைத் தலைவர் திரு. பாக்கியநாதன் மார்ச் மாதம் முதல் வாரத்தில் யாழ்ப்பாணம் வரவுள்ளார்.

அவரின் யாழ். வருகையின் போது பனை அபிவிருத்தி தொடர்பான [illegible] மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் [illegible] இருக்கிறது.

இதேவேளை கைதடியில் அமைக்கப்பட்டுள்ள பனை ஆராய்ச்சி நிலையத்திற்கு தேவையான இயந்திரங்களை எடுத்துவருவதற்கும் அதை மீள இயங்க வைப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்[illegible] தெரிவிக்கப்பட்டது. (ஒ-4-7)

## புதிய இராணுவ நிலைகள் அமைப்பு

அம்பாறை, பெப். 25

அம்பாறை மாவட்ட அக்கரைப்பற்றிலுள்ள கண்டி, மொனறாகலை பாதைகளில் அமைந்துள்ள சகல இராணுவ நிலைகளும் பலப்படுத்தப்பட்டு வருகின்றன.

கண்டி வீதியிலும், மொனறாகலை வீதியிலும் அமைந்துள்ள பழைய இராணுவ முகாம்கள் மீளத் திருத்தி அமைக்கப்பட்டு வருவதுடன், மேலும் பல புதிய காவல் நிலைகளும் அமைக்கப்பட்டு வருகின்றன. (ஒ-5)

## புலிகளின் குரல் வானொலியில்

25-02-1995

சனி இரவு

★ 8-01— புரட்சிக்குரல்
★ 8-05— நிகழ்வும் பகிர்வும்
★ 8-20— நேயர் கடிதங்கள்
★ 8-30 — செய்திகள்
★ 8-40— கலந்துரையாடுவோம்— "பனை, தென்னை வள அபிவிருத்தியில் தமிழீழ மக்களின் பங்கு"

26-02-1995

ஞாயிறு காலை

★ 7-02 — மாவீர் வணக்கம்
★ 7-15— களத்தில் மலர்ந்தவை
★ 7-30 — செய்திகள்
★ 7-35 — பத்திரிகைச் செய்திகள்
★ 7-40— களத்தில் மலர்ந்தவை நிகழ்ச்சியின் தொடர்ச்சி

## தமிழீழ வானொலி

ஒலிபரப்பு

சனி மாலை

★ 5-01 — சிந்தனைச் சிதறல்
★ 5-02 — எழுச்சிக் கீதம்
★ 5-10 — புதியவை
★ 5-15— வேங்கையின் நெஞ்சம்
★ 5-30— அறிவியல் வினாடி — வினாப் போட்டி
★ 6-00 — சிந்தனைக்குச் சில வினாடிகள்
★ 6-02— பாமாலை
★ 6-15— என் தெரிவு

## பாராட்டு விழா

யாழ்ப்பாணம், பெப். 25

'மல்லிகை' ஆசிரியர் டொமினிக்ஜீவாவின் 30வருட ஆக்க இலக்கியப் பணியைப் பாராட்டும் வைபவமும், 'மல்லிகை' இதழின் 30ஆவது ஆண்டு மலர் வெளியீடும் இன்று சனிக்கிழமை பிற்பகல் 3-30 மணியளவில் யாழ். ஆரியகுளம் சந்தியில் அமைந்துள்ள தமிழ் எழுத்தாளர் ஒன்றிய மண்டபத்தில் நடைபெறவுள்ளது. [ஒ-5]

## சங்கீத நெறி செயலமர்வு

யாழ்ப்பாணம், பெப். 25

சாவகச்சேரிக் கோட்ட— சங்கீத பாடநெறிக்கான சேவைக்காலப் பயிற்சியும் செயலமர்வும் இன்று சனிக்கிழமையும், நாளை மறுதினம் திங்கட்கிழமையும் சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது [ஒ-14)

## அன்பளிப்பு

சண்டிலிப்பாய் பெப். 25

வட்டுக்கோட்டை லயன்ஸ் கழகம், பொன்னாலை ஸ்ரீ வரதராஜப் பெருமாள் வித்தியாலத்தில் கல்வி பயிலும் வறிய மாணவர்களுக்கு அப்பியாசக் கொப்பிகள் பென்சில்கள் பற்றும் பாடசாலை உபகரணங்களை அன்பளிப்பாக வழங்கியுள்ளது (ஒ-5-135)

## சமுர்த்தி திட்டத்துக்கு 12 லட்சம் குடும்பங்கள்

பொதுமக்கள் ஐக்கிய முன்னணி அரசின் சமுர்த்தி (சுபீட்ச) திட்டத்தின் கீழ் 12 லட்சம் குடும்பங்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

ஆயிரத்து 50 கிராம சேவையாளர் பிரிவுகளில் ஆய்வுகள் நடத்தப்பட்ட பின்னர் இக் குடும்பங்கள் தெரிவு செய்யப்பட்டன என்று தெரிவிக்கப்படுகிறது.

இத்திட்டம் எதிர்வரும் ஜூன் முதலாம் திகதியில் இருந்து பூரண அமுலுக்கு வரும் என்று தெரிவிக்கப்படுகிறது. [ஐ-எ]


## இலங்கை இளங்கலைஞர் மன்றத்தின் 15ஆவது இசை விழா

கலா மண்டபம் - சட்டநாதர் வீதி, நல்லூர்.

நிறைவு நாள் 25-02-1995 சனிக்கிழமை

வீரவேங்கை கஸ்ரோ (இயல்வாணன்)
வாரிவளவு காரைநகர்
நினைவாக

சுன்னாகம் இ. சுப்பிரமணியம் மிதிவண்டி விற்பனை அகம் ஆதரவில்

மாலை

4-00 — 5-00 மங்கல இசை
என். கே. கணேசன், கே. சிவதாஸ் — நாதஸ்வரம்
என். கே. வீராசாமி, எஸ். சொர்ணலிங்கம் — தவில்

5-00 — 5-20 பாட்டு
ஜே. றனிதா — கு. கனிசியா
பி. அனுராதா — த. ராமதேவி
கே. ஜெயலக்ஷ்மி — இ. புஸ்பலதா
தி. துஸயந்தி — எஸ். சுகந்தி
யோ. வளர்மதி — இ. மோகனா
த. தயாநிதி — வே. பிரியதர்சினி
இ. அட்சலட்சுமி — பொ, மஞ்சுளா
து. கமலாஜோதி — த. பிருந்தா
சுபாத்திரா கணேசன் — வயலின்
எம். கஜன் — மிருதங்கம்

5-20 — 5-40 மிருதங்க இசை
க. கெரத்குமார் — பா. ரவிச்சந்திரன்
ற. கஜானன் — ம. லோகேந்திரன்
ம. நிவின்சன் — ச. செல்வநாதன்

5-40 — 6-00 வீணை இசை
காயத்திரி கானமூர்த்தி, வசந்தா பஞ்சமூர்த்தி — வீணை
எஸ். துரைராசா — மிருதங்கம்

6-00 — 6-30 பாட்டு
அமரேசன் — பாட்டு (போராளிக் கலைஞன்)
ஆர் எஸ். கேசவமூர்த்தி — வயலின்
நிதர்சன் — மிருதங்கம் (போராளிக் கலைஞன்)

6-30 — 7-00 வீணை இசை
அம்பிகை வைரவநாதன் — வீணை
பி. ரதிரூபன் — மிருதங்கம்
கே. மயூரன் — கடம்

7-00 — 7-20 மிருதங்க இசை
தினேஸ், வசந்தன், நிதர்சன் — போராளிக் கலைஞர்

7-20 — 8-05 பாட்டு
பொன். சுந்தரலிங்கம் — பாட்டு
R. ராதாகிருஷ்ணன் — வயலின்
S. மகேந்திரன் — மிருதங்கம்
சதாவேல்மாறன் — கடம்

8-05 — 8-20 மங்கல விளக்கேற்றல்
திரு. ஜவான் அவர்கள் (பொறுப்பாளர், நிதர்சனம்)
செல்வி ரதி அவர்கள் (பொறுப்பாளர், மகளிர் அமைப்பு)

★ தலைவர்
திரு. புதுவை இரத்தினதுரை அவர்கள் (பொறுப்பாளர், கலை பண்பாட்டுக் கழகம்)

★ பிரதம அதிதி:
திரு. சி. கரிகாலன் அவர்கள் (துணைப்பொறுப்பாளர், அரசியல் துறை)

★ சிறப்பு விருந்தினர்
திரு. சி. இளம்பரிதி அவர்கள் (பொறுப்பாளர், அரசியல்துறை யாழ். மாவட்டம்)
திரு. எஸ். சோமசுந்தரம் அவர்கள் (சமூக சேவையாளர், உரிமையாளர்) சுன்னாகம் இ. சுப்பிரமணியம் மிதிவண்டி விற்பனை அகம்

8 20 — 9-15 வாத்திய இசை
எம். கோபாலகிருஷ்ணன் — ஷாகிபாஷா
ஆர். எஸ். கேசவமூர்த்தி — வயலின்
எஸ். துரைராசா — மிருதங்கம்
கே. மயூரன் — தபேலா
ச. வேலமாறன் — கடம்

9-15 — 10-15 பரதநாட்டியம்
கொக்குவில் கலாபவன மாணவிகள்
தயாரிப்பு: திருமதி சாந்தினி சிவநேசன்

வாழ்த்துவோர்,
மாலா மருந்தகம்
பருத்தித்துறை வீதி, கல்வியங்காடு.

[சி-541]


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

சுண்டிக்குளி பாடசாலைகளுக்கு அண்மையாக ஈச்சமோட்டை வீதியில் சகல வசதிகளையும் கொண்ட வீடு இரண்டு பரப்புக் காணியுடன் விற்பனைக்குண்டு. சி. நாதன், இல. 16/3. விதானையார் வீதி, சுண்டிக்குளி, யாழ்ப்பாணம். [35367]

சுத்தமான அல்சேஷசன் நாய்க்குட்டிகள் பூச்சி நீக்கப்பட்ட 2 மாதம். விற்பனைக்கு உண்டு தொடர்பு: Dr. செல்வத்துரை, நாச்சிமார் கோயிலடி, யாழ்ப்பாணம். [8353]

எமது சங்கத்தில சுத்தமான பசு நெய் விற்பனைக்குண்டு. தேவையானவர்கள் கீழ் விலாசத்தில் தொடர்பு கொள்ளவும்: பொதுமுகாமையாளர், கலாசாலை வீதி, யாழ். மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம், திருநெல்வேலி கிழக்கு, கோப்பாய். [சி-655]

45 நாட்கள் நிரம்பிய நல்ல இன அல்சேஷன் நாய் குட்டிகள் விற்பனைக்குண்டு. தொடர்பு: S. குமார், 16/18, விதானையார் வீதி, ஈச்சமோட்டை, யாழ்ப்பாணம். [சி/664]

## விற்பனையாகிறது

கும்பகர்ணன் வதைப்படலம் யாழ். பல்கலைக்கழகத்தின் வெளிவாரி முதற்கலைத் தேர்வு G. A. Q. பாலபண்டித மாணவர்களுக்கு ஒரு பாடநூல் எல்லாப் புத்தகசாலையிலும் கிடைக்கும். மக்மிலன் புத்தகசாலை, யாழ்ப்பாணம், ஸ்ரீகாந்த் புத்தகசாலை, நல்லூர். (சி-384)

## வீடுவளவு விற்பனைக்கு

கைதடி நுணாவில் பகுதியில் அறவழிப் போராட்டக் குழு அலுவலகத்துக்கு அண்மையில் வருமானங்களுடன் கூடிய 9 பரப்புக் காணியும், கல் வீடு வளவும் விற்பனைக்குண்டு. தொடர்பு: த. வேலாயுதம், சட்டத்தரணி ஸ்ரேசன் றோட், சாவகச்சேரி. (35317)

## தேவை

சியாக்காய்ப் பவுடர், பற்பொடி, நீலம், கச்சான் அல்வா மற்றும் இனிப்பு வகைகள் ஒட்டுவதற்கு பெண் பிள்ளைகளும், சைக்கிளில் வியாபாரம் செய்யக்கூடிய ஆண்களும் தேவை. தொடர்பு: சசி கைத்தொழிலகம், பாடசாலை வீதி, ஆறுகால்மடம். [8352]

## மணமக்கள் தேவை

கனடாவில் நிரந்தர வதிவுரிமையுடைய 8இல் செவ்வாயுடைய 36 வயது மணமகனுக்கும், உதயத்தில் செவ்வாயுடைய 33 வயது மணமகளுக்கும் பட்டதாரி மணமக்கள் தேவை. சீதனம் எதிர்பார்க்கப்படமாட்டாது. கனடாவுக்கு ஸ்பொன்சர் செய்யலாம். முழுவிவரங்களுடன் கடித மூலம் தொடர்பு கொள்ளவும். இல 763, மே/பா உதயன், யாழ்ப்பாணம் [35355]

## AVAILABLE

Astrological Magazine by B. V. Raman. World trends and tensions in 1995-1996. 1995 Annual Number available Poobalasingham Book Depot, Jaffna (சி-393)

## மாணவர்கள் கவனத்திற்கு

விற்பனையாகின்றது: புதிய செயல் நூல் தமிழ் மொழி ஆண்டு 1, ஆண்டு 2 1994ஆம் ஆண்டு முதல் நடைமுறைக்கு வந்துள்ள முதல் மொழி — தமிழ் — பாடத்திட்டத்தின் ஆறு விடயப் பரப்புகளும் இடம்பெற்றுள்ளன. கேட்டல் கிரகித்தல், பார்வைப் பிரித்தறிகை, உளவியக்கச் செயற்பாடுகள், பேச்சு மூலம் வெளிப்பாடு. வாசிப்பு, எழுத்து வெளியீடு: கு. வி. அச்சகம், யாழ்ப்பாணம். (8355)

விற்பனையாகின்றது: புதிய பாடநூல் நாமும் சுற்றாடலும் ஆண்டு 2 விளக்கப்படங்களுடன் கூடியது 1994 ஆம் ஆண்டு முதல் நடைமுறைக்கு வந்துள்ள தேசியக் கல்வி நிறுவகம் ஆரம்பக் கல்வித்துறை ஆண்டு 2க்கு ஆன விரிவான பாடத்திட்டம் முழுவதையும் அடிப்படையாகக் கொண்டுள்ளது. வெளியீடு: கு. வி. அச்சகம், யாழ்ப்பாணம். (8354)

## தவறிவிட்டது

சவரிமுத்து தேவசகாயத்தின் 230391769 V இலக்க அடையாள அட்டை 21-2-95 இல் தாண்டிக்குளத்திற்கும் நல்லூருக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து இல. 28, றக்கா லேன், சுண்டிக்குளி, யாழ்ப்பாணம் விலாசத்திற்கு அனுப்பி வைக்கவும். [35372]

## ரியூசன்

ஆண்டு - 3, ஆண்டு - 4 படிக்கும் இருவருக்கு கணிதம், தமிழ், சுற்றாடல், ஆங்கிலம் வீட்டுக்கு வந்து கற்பிக்கக்கூடிய ஆசிரியர்கள் அல்லது A/L விஞ்ஞானம் படித்தவர்கள் உடன் தொடர்புகொள்ளவும். இல. 3, சென். பற்றிக்ஸ் வீதி, யாழ்ப்பாணம். (353 0)

## வாடகைக்குத் தேவை

யாழ். நகரிலிருந்து மூன்று மைல் சுற்றாடலில் தனி வீடு வாடகைக்குத் தேவை. நேரில் தொடர்பு கொள்ளவும். க. சதானந்தன், இல. 24/1, அடப்பன் வீதி, யாழ்ப்பாணம் [35350]

## REPAIRS!

Repairs! Are your Radios T.Vs, Decks Giving Trouble? Bring them to us and Get them Repaired with Guarantee. Dilka Watch and Radio Works. 284, Stanley Road (Ariyakulam Junction) Close to Vanavil Jaffna, Branch Kandy Road Chavakachcheri. [சி-364]

## பாலர் ஆசிரியராக

விரைவில் பயிற்சி ஆரம்பம்: க. பொ. த. (சா/த) கடைசித் தகைமை சனி, ஞாயிறு சமுகம் தர வசதியற்றோர் தபால் வழியிலும் பயிலலாம். பாலர் ஆசிரியர் சங்கம், உயர்கலைக் கல்லூரி, ஆனைப்பந்தி யாழ்ப்பாணம். (35295)

# பதவி வெற்றிடம்

| | |
|---|---|
| பதவி: | பெண் விடுதி மேற்பார்வையாளர் |
| தகைமை: | க. பொ. த. (சா. த.) |
| வயது: | 20 — 35 |
| வேதனம்: | 6 மாதப் பயிற்சியின் பின் 1650 — 2650 20 X 50 |

பயிற்சிக் காலத்தில் ரூபா 500/-ம் இலவச உணவு தங்குமிடம் வழங்கப்படும்.

விண்ணப்ப முடிவு: 05 — 03 — 1995

அதிபர்,
நவீல்ட் பாடசாலை,
கைதடி.

(சி-598)

# 7-ம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்: 20 — 10 — 1937



மறைவு: 13 — 02 — 1988

## அமரர் தி. சி. சண்முகலிங்கம்

(இணுவில் கிழக்கு)

திதி: 1995 – 02 – 25

அன்புடன் எங்களுடன் வாழ்ந்தீர்கள் அப்பா
ஆறாத்துயரில் எம்மை ஆழ்த்திவிட்டுச் சென்று
ஏழு ஆண்டு காலம் மறைந்ததுவே - இன்று
எங்கள் இதயத்தில் என்றும் இருப்பீர்கள்!

அன்பான மனைவி பிள்ளைகள்
சுற்றத்தார்.

''சுகந்தகம்''
இணுவில்.

(35347)

# 1st YEAR ANNIVERSARY

Born: 10 — 05 — 1917



Called to Rest: 25 — 02 — 1994

In Precious Memory of

## M. FRANCIS JOSEPH

(Retired, Inspector of Police)

Whatever the years may bring us of joy or pain or woe,
Your love and your prayers will protect us
Now and for ever more

Fondly Remembered by
His Sons, Daughters - in - law
and grand - Children.

28/3, St. Benedict's Road,
Off Kachcheri - Nallur Road,
Jaffna.

(35327)

காமினி கொலை தொடர்பாக

# ஸ்ரீலங்கா பொலிஸாரின் விசாரணை குறித்து திருப்தி

## இந்திய நிபுணர்குழு தகவல்

கொழும்பு, பெப் 25

கிராண்ட்பாஸ் குண்டு வெடிப்பில் கொல்லப்பட்ட காமினி திஸாநாயக்காவின் கொலை தொடர்பாக ஸ்ரீலங்கா பொலிஸார் மேற்கொண்ட விசாரணைகள் திருப்தி தருவதாக உள்ளதாக இந்திய நிபுணர் குழு தெரிவித்துள்ளது.

காமினி கொலை தொடர்பான விசாரணைகளில் ஸ்ரீலங்கா பொலிஸாருக்கு உதவுமுகமாக இந்திய நிபுணர் குழு ஒன்று கடந்த திங்கட்கிழமை கொழும்பு வந்திருந்தது.

இந்தக் கொலை தொடர்பாக பொலிஸார் இதுவரை மேற்கொண்ட விசாரணைகளின் அறிக்கைகளை ஆராய்ந்த இந்திய நிபுணர் குழு விசாரணைகள் திருப்திகரமாக அமைந்துள்ளதாகத் தெரிவித்துள்ளதாக 'தினமின' சிங்கள நாளிதழ் நேற்று செய்தி வெளியிட்டுள்ளது. (ஒ-3)

''சேனைகளின் கர்த்தாவே, உமது வாசஸ்தலங்கள் எவ்வளவு இன்பமானவைகள்

(சங். 84:1)

# ''பிரதிஷ்டை ஆராதனை''

காலம்: 26-02-1995 (ஞாயிறு)

நேரம்: மாலை 4-00 மணி

இடம்: கல்வாரி பூரண சுவிசேஷ ஊழியங்கள் ஐங்கரன் வீதி, சுதுமலை தெற்கு.

தேவபிள்ளைகள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

சபை மேய்ப்பன், ஊழியர்கள்,
விசுவாசிகள், கல்வாரி பூரண-
சுவிஷேச ஊழியங்கள்,
89, பிறவுண் வீதி,
கொக்குவில்.

(35368)

## நல்லூர் வணிகர் கழகம்

# புதிய நிர்வாக சபை

09 – 02 – 1995 இல் நடைபெற்ற நல்லூர் வணிகர் கழகத்தின் ஆண்டுப் பொதுக் கூட்டத்தில் நடப்பு வருடத்திற்கான பின்வரும் நிர்வாக சபை உறுப்பினர்கள் ஏகமனதாக தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர் — திரு. நா. காசிவிசுவநாதன்
செயலாளர் — திரு. கு. துரைராசா
பொருளாளர் — திரு க. கிருஷ்ணானந்தமூர்த்தி
உபதலைவர் — திரு. சு. தனபாலசிங்கம்
உபசெயலாளர் — திரு. செ. வேல்சாமி

## உறுப்பினர்கள்

திரு. என்.கே. குலசிங்கம் திரு. சி. ஸ்ரீஸ்கந்தராசா
திரு. ந. எழில்மோகன் திரு. சு. ரவி
திரு. க. நவரெத்தினம் திரு. கு. க. நடராசா
திரு. க. லோகானந்தம் திரு. சி. சிவபாலசுப்பிரமணியம்
திரு. க. தர்மகுலசிங்கம் திரு. த. பாஸ்கரமூர்த்தி

நன்றி

தலைவர் செயலாளர்
நல்லூர் வணிகர் கழகம்.

[சி-674]

# ஓராண்டு நினைவஞ்சலி

மறைவு: 08 — 03 — 1994



திதி: 25 — 02 — 1995

## அமரர் வைரமுத்து கனகரத்தினம்

(இளைப்பாறிய சித்த ஆயுர்வேத டாக்டர் கந்தர்மடம், யாழ்ப்பாணம்)

''ஒருமையுடன் நினது திருமலரடி நினைக்கின்ற
உத்தமர்தம் உறவு வேண்டும்''

என தினமும் தங்கள் வாயால் பாடி எம்மை மகிழ்வித்து வாழ்ந்த எனது அருமைக் கணவரே! நீங்கள் மறைந்து ஓராண்டு சென்றாலும், அல்லும் பகலும் நீங்கள் எங்களை அன்புடன் பண்பாக வழி நடத்தியதை எண்ணி எண்ணி நாம் கலங்குகிறோம் எங்கள் உயிர் உள்ளவரை உங்கள் நினைவாகவே வாழ்கின்றோம்.

உங்கள் ஆத்ம சாந்திக்காக தினமும் நீங்கள் வணங்கிய பிள்ளையாரை பிரார்த்தித்து கண்ணீர் அஞ்சலி செலுத்தும்,

தங்களது
அன்பு மனைவி க. கௌரி அம்மா,
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

21/3 அன்னசத்திர ஒழுங்கை,
கந்தர் மடம்,
யாழ்ப்பாணம்.

[35381]

ஓம்
ஸ்ரீராம ஜெயம்
யாழ்ப்பாண - வண்ணை

# ஸ்ரீ வெங்கடேச வரதராஜப் பெருமாள் தேவஸ்தானம்

# இலட்க்ஷார்ச்சனை

காலம்:

27·02·95 – 08·03·95

பத்துத் தினங்கள் நடைபெறும்

காலை 9மணிக்கு

ஸ்ரீதேவி, பூமிதேவி சமேத ஸ்ரீவெங்கடேச வரதராஜப் பெருமாளுக்கு ஸ்நபனா அபிஷேகம் நடைபெறும்.

மாலை 4·30மணிக்கு

இலட்க்ஷார்ச்சனையும் விசேட பூசையும் நடைபெறும்.

இலட்க்ஷார்ச்சனை கால
தெய்வீகப் பேருரைகள்

நேரம்:

மாலை 6 . 15 — 7-30மணிவரை

★ ஸ்ரீமத் பாகவதம் ★

நிகழ்த்துபவர்:

செஞ்சொற் சீராளன்
திரு. த. சிவகுமாரன்
(அமைப்பாளர், காரைநகர் கம்பன் கழகம், ஆசிரியர், யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி)

★ அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம் ★

இங்ஙனம்
தேவஸ்தான ஆதீன மகாசபை.

(35377)

யாழ்ப்பாணக் கல்லூரி

# பட்டதாரிப் பிரிவு

464, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

## G. S. Q (1995/96)
## உயிரியல் வகுப்புகள் ஆரம்பம்


G. S. Q உயிரியல் பாடநெறிக்கு விண்ணப்பித்தவர்களும், G. S. Q விற்கு பேராதனைப் பல்கலைக் கழகத்தில் பதிவு செய்ய விரும்புபவர்களும் எதிர் வரும் திங்கட்கிழமை (27-2-95) காலை 10 மணிக்கும் 12 மணிக்குமிடையில் எமது நிறுவனத்துடன் தொடர்பு கொள்ளவும்.

- இயக்குநர்.

(சி/390)

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

அன்னை மடியில்: 18 — 12 — 1957



இறைவன் அடியில்: 26 — 01 — 1995

## அமரர் சுப்பிரமணியம் குமாரசாமி

(குட்டி)

(கச்சாய் கண்ணகை அம்மன் ஆலய முன்னாள் நிர்வாக இயக்குநர்)

அன்புக்கிலக்கணமாய், பண்பிலே தெய்வமாய், பாசத்தின் உறைவிடமாய் எம்மை எல்லாம் உருவாக்கிய தெய்வமே! தங்கள் ஆத்மா சாந்தியடைய அம்பாளைப் பிரார்த்திப்பதுடன், என்றும் நீங்கா நினைவுடையோம்.

27 - 01 - 1995 இல் நடைபெற்ற எமது குடும்பத் தலைவர் சுப்பிரமணியம் குமாரசாமி (குட்டி) அவர்களின் இறுதிக்கிரியைகளில் கலந்து கொண்ட உற்றார், உறவினர், நண்பர்கள், கண்ணீர் அஞ்சலிப் பிரசுரங்கள் வெளியிட்டும், மலர் வளையங்கள் சாத்தியும் அனுதாபச் செய்திகள் அனுப்பியும், பலவித உதவி ஒத்தாசை புரிந்து பல்வித பங்களிப்பைப் பயனுடன் வழங்கிய பொதுஸ்தாபனங்கள், அன்பர்கள் அனைவருக்கும் எமது குடும்பத்தினரின் உளமார்ந்த நன்றியை நவில்கின்றோம்.

அத்துடன் இன்று (25 - 02 - 1995) சனிக்கிழமை நடைபெறும் சபண்டீகரணக் கிரியைகளிலும், மதிய போசனத்திலும் அனைவரையும் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

— குடும்பத்தினர்.

கச்சாய் அம்மன் கோயிலடி,
கச்சாய் தெற்கு, கொடிகாமம்.

[35370]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
292/2 காவலர் வீதி
யாழ்ப்பாணம்

## புனரமைப்பு அக்கறை!

வடக்கில், குறிப்பாக யாழ்ப்பாண மாவட்டத்தில், புனரமைப்புப் பணிகளைச் செய்வதில் அரசாங்கம் பெரும் "அக்கறை" காட்டி வருகிறது. அரச தொடர்பு சாதனங்களில் யாழ்ப்பாணத்துப் புனரமைப்புப் பணிகள் குறித்த செய்திகள் இல்லாத நாளே இல்லை என்றாகி விட்டது. காலையும் மாலையும் அது பற்றிய "புளுகல்"களுக்குக் குறைவில்லை!

இவற்றுக்கு மத்தியில், வட பகுதி புனரமைப்புச் செயலணிக் குழு கடந்த வாரம் கூடி யாழ்ப்பாணத்தில் புனர்நிர்மாண வேலைகளை எதிர் வரும் மார்ச் முதலாம் திகதி தொடக்கம் ஆரம்பிக்க முடிவு செய்துள்ளது. செயலணிக் குழுவின் தலைவரான பொதுநிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சர் ரத்னசிறி விக்கிரமநாயக்கா யாழ்ப்பாணம் வரப்போவதாகவும் செய்திகள் வெளிவந்தன.

ஆரம்பத்தில் வடபகுதிக்கான புனர்நிர்மாண வேலைகளை அரசாங்க நிதியைக் கொண்டே ஆரம்பிக்கப் போவதாக ஆகப்பிந்தி தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆனால் வடக்கு - கிழக்கின் புனர்நிர்மாண வேலைகளுக்கு வெளிநாடுகள் பலவும், ஐ. நா. போன்ற சர்வதேச அமைப்புகளும் தாராளமாக உதவ முன்வந்திருக்கின்றன.

வடக்கில் மிகக் குறிப்பாக யாழ்ப்பாணத்தில் அரசாங்க நிதியைக் கொண்டேனும் புனரமைப்பு வேலைகளை ஆரம்பித்து, அதனைக்கூறி அல்லது காட்டி பெருந்தொகையான வெளிநாட்டு நிதியைப் பெறுவது அரசின் நோக்கம் இறால் போட்டு சுறாப் பிடிக்கும் தந்திரம் இது புனரமைப்புப் பணிகளுக்கென வரும் நிதி வளத்தை அரசாங்கத்தின் பிற தேவைகளுக்குப் பயன்படுத்தலாம் அல்லவா? வெளியில் இருந்து வரும் பணத்தைப் பொது நிதிக்குள் வரவு வைத்து— சேர்த்து - தெற்கின் தேவைகளுக்கும் செலவுசெய்து அப்பகுதி மக்களின் ஆதரவைப் பெறலாம் அல்லவா?

எப்படியோ, அரசாங்கத்துக்கு இப்போது அவசரமாகத் தேவைப்படுவது பணம். வடக்கு-கிழக்குப் புனரமைப்பை ஆரம்பித்தால் அது கிடைக்கும். இடைநடுவில் புனரமைப்பை நிறுத்தினால் வெளிநாடுகள் என்ன கேட்கவா போகின்றன?

மேலும் வடக்கு-கிழக்கில் புனரமைப்புப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டால் போர் நின்று விட்டதாக வெளி உலகத்தை நம்பவைக்கலாம். அதன் மூலம் ஸ்ரீலங்காவின் ஏனைய தேவைகளுக்கும் வெளிநாட்டு உதவியைத் தாராளமாகப் பெறலாம்.

இத்தகைய உள்நோக்கங்கள் ஒருபுறமிருக்க—

யாழ்ப்பாணத்தில் புனரமைப்புப் பணிகளை ஆரம்பிப்பது நடைமுறைச் சாத்தியமற்றது என்பதற்கு—

யாழ். மாநகரசபைப் பகுதிக்கு ஜெனரேற்றர்கள் மூலம் மின்சாரம் வழங்கும் திட்டம்பிசுபிசுக்கும் நிலையில் இருப்பது ஓர் நல்ல உதாரணமாகும்!

குடாநாட்டுக்கு இலகுவான போக்குவரத்துப் பாதை ஒன்றைத் திறக்காமல், புனரமைப்பு வேலைகளைச் செய்வது என்பது அர்த்தமற்றது. சாத்தியமற்றது என்பதனை அரசு இதிலிருந்தாவது உணருமா?

எத்தனை கப்பல்களை சேவையில் ஈடுபடுத்தினால் என்ன? புனர்நிர்மாணத்துக்குத் தேவையான பொருள்கள் உபகரணங்களை தருவிக்க முடியுமா? இது மலையைக் கெல்லி எலியைப் பிடிக்கும் அசாதனையாகத்தான் இருக்கும்!

குடாநாட்டுக்கு போக்குவரத்துப் பாதையை திறக்காமல், நிரந்தர போர் நிறுத்தத்தைக் கொண்டு வராமல் புனரமைப்புப் பணிகளைச் செய்வதற்கு மறுவளமாகச் செயற்பட அரசு முனைவது பெரும் கேலிக் கூத்தாகவே முடியும்.

எனவே அரசின் இந்தப் புனரமைப்புப் பணிகள் என்ற கவர்ச்சியில் தமிழ் மக்கள் இலகுவில் எடுபட்டுவிடக் கூடாது. தனது சொந்த நலன் கருதி பல உள்நோக்கங்களோடு அரசு எதிர்வளமாக நடக்க முனைகிறது. அது குறித்து மிக எச்சரிக்கையாகவும், விழிப்பாகவும் இருக்க வேண்டும்.

---

வடக்கு- கிழக்குப் பகுதிகளில்

# சமாதான நிலை திரும்பிய பின்பே புனரமைப்பு நிதி வழங்கப்படும்

## உதவும் நாடுகள் அரசுக்கு தெரிவிப்பு

கொழும்பு, பெப். 25

வடக்கு - கிழக்கில் சமாதான நிலை திரும்பிய பின்னர் புனரமைப்புக்கு தேவையான நிதியை வழங்க முடியும் என்று உதவும் நாடுகள் இலங்கை அரசுக்கு தெரிவித்துள்ளன.

வடக்கு - கிழக்கு புனரமைப்புக்காக நிதியைப் பெறும் பேச்சுக்கள் உதவும் நாடுகளின் பிரதிநிதிகளுக்கும், ஜனாதிபதி செயலணிக் குழுப் பிரதிநிதிகளுக்கும், இடையில் நேற்று முன்தினம் கொழும்பில் நடந்த சமயம் அந்த உதவும் நாடுகள் மேற்கண்டவாறு இலங்கைக்குத் தெரிவித்துள்ளன.

வடக்கு புனரமைப்பு பணிக்கு 81 கோடி 60 லட்சம் அமெரிக்க டாலர்கள் செலவிலான திட்டத்தை தயாரித்திருக்கும் இலங்கை அரசாங்கத்தின் ஜனாதிபதி செயலணிக் குழு, இத்திட்டத்துக்கு உதவி பெறும் வகையில் இலங்கைக்கு உதவும் நாடுகளின் பிரதிநிதிகளை சந்தித்தது.

வடக்கு - கிழக்கில் இறுதி சமாதானம் ஏற்படுத்தப்பட்ட பின்னர் தமது நாடுகள் உதவிகளை வழங்கும் என அந்த நாடுகளின் பிரதிநிதிகள் அப்போது தெரிவித்தனர். [ஒ-3]

5ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சை

# மாதிரி வினாத்தாள் செய்திப்பத்திரிகையில்

கொழும்பு, பெப். 25

5 ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சைக்கு இவ்வாண்டு முதல் அறிமுகப்படுத்தப்படவிருக்கும் புதிய பாடவிதானத்துக்கு ஏற்ப தயாரிக்கப்படவுள்ள வினாத்தாள்களின் மாதிரி வினாத்தாள்களை செய்திப் பத்திரிகைகளில் வெளியிடுவது என்று பரீட்சைத் திணைக்களம் தீர்மானித்துள்ளது.

மொழி, கணிதம் ஆகிய பாடங்களுக்குப் பதிலாக பொது அறிவோடு தொடர்புடைய முறையில் புதிய பாடத்திட்டங்கள் இப் பரீட்சைக்காக வகுக்கப்பட்டுள்ளன. இதனடிப்படையிலேயே புதிய வினாத்தாள்கள் அமையவுள்ளன.

இதே வேளை — ஆண்டு தோறும் புலமைப் பரிசில் பெறும் மாணவர் எண்ணிக்கை இந்த ஆண்டு முதல் 7 ஆயிரத்து 500 இல் இருந்து 10 ஆயிரமாக அதிகரிக்கப்படவுள்ளது. (இ-எ)

## விடியலின் கீதம்' நூல் வெளியீட்டு விழா இன்று

யாழ்ப்பாணம், பெப். 25

மீசாலையூர் கமலாவின் 'விடியலின் கீதம்—' கவிதைத் தொகுதி நூல் வெளியீடு இன்று சனிக்கிழமை பிற்பகல் 3மணிக்கு நல்லூர் நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெறும்.

செம்பியன் செல்வன் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் ஆத்மஜோதி நா. முத்தையா ஆசியுரை வழங்குவார். சிறப்புரையை யாழ். மாவட்ட அரசியல் பொறுப்பாளர் திரு. சி. இளம்பரிதியும், வெளியீட்டுரையை மகளிர் அபிவிருத்தி நிலைய இயக்குநர் திருமதி சறோஜா சிவச்சந்திரனும் மதிப்பீட்டுரையை திருமதி ஆதிலெட்சுமி சிவகுமாருவும் வழங்குவார்கள்.

முதற்பிரதியை சாவகச்சேரி இந்துக்கல்லூரி உப அதிபர் திரு. ம. அருணாசலம் பெற்றுக் கொள்வார்.

கொழும்பு தலைமையகத்தில் இருந்து

## செஞ்சிலுவை யாழ். கிளை நிதியைப் பெற முயற்சி

யாழ்ப்பாணம், பெப். 25

இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் யாழ். கிளை கொழும்பில் உள்ள தலைமைக் காரியாலயத்தில் இருந்து நிதியை பெறுவதற்கு துரித முயற்சியை மேற்கொண்டு வருகின்றது.

யாழ் கிளையைச் சேர்ந்த பிரதிநிதிகள் சிலர் இதற்காக கொழும்புக்குச் சென்றுள்ளனர்.

நிதியின்மையால் செஞ்சிலுவைச் சங்கம் யாழ். கிளையில் பணிபுரியும் ஊழியர்களுக்கு சம்பளம் வழங்குவதற்கும் பிற தேவைகளுக்கும் பெரும் நெருக்கடி நிலை தோன்றியிருப்பதாக தெரிவிக்கப்பட்டது. (ஒ-17)

நில அபகரிப்பை ஆட்சேபித்து

## 386 தமிழ் குடும்பங்கள் உண்ணாவிரத ஏற்பாடு

மட்டக்களப்பு, பெப். 25

மட்டக்களப்பின் புதூரில் விமான நிலைய விஸ்தரிப்பிற்கென அரசினால் அபகரிக்கப்பட்ட 386 தமிழ் குடும்பங்களின் நிலங்களுக்கு நஷ்டஈடு எதுவும் வழங்கப்படாமல் இருப்பதை ஆட்சேபித்து உண்ணாவிரதப் போராட்டம் ஒன்றுக்கு அக்குடும்பங்கள் ஏற்பாடுகளைச் செய்து வருகின்றன.

1986 ஆம் ஆண்டு அபகரிக்கப்பட்ட இந்த நிலங்களில் இன்று வரை விமான நிலையம் விஸ்தரிக்கப்படவுமில்லை; நிலச் சொந்தக்காரரான தமிழருக்கு எதுவித நஷ்டஈடு வழங்கப்படவுமில்லை என்று தெரிவிக்கப்படுகிறது. [ஒ-5]

# பல்கலைக் கழகங்களுக்கு அனுமதி: மாணவர்கள் விவரம் தாமதமாகும்

யாழ்ப்பாணம், பெப். 25

94/95 கல்வியாண்டுக்கான பல்கலைக்கழக அனுமதிக்கான வெட்டுப்புள்ளி விவரம் வெளியாகியுள்ள போதும்—

பல்கலைக் கழகங்களுக்கு அனுமதி பெறும் மாணவர்கள் விவரம் வெளியிடுவது தாமதமாகும் எனத் தெரிய வந்தது.

வெட்டுப்புள்ளிகள் மதிப்பிட்ட முறைகள் தொடர்பாக எழுப்பப்பட்டுள்ள பல எதிர்ப்புக் கருத்துக்களை அடுத்து மாணவர் தொடர்பான விவரங்களை வெளியிடுவதில் பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவுக்கு சிக்கல் ஏற்பட்டுள்ளதாகவும்—

இதனால் பல்கலைக் கழகங்களுக்குஅனுமதி பெறும்மாணவர்கள் விவரம் வெளியிடுவது தாமதமாகும் என்றும்— தெரிவிக்கப்பட்டது.

வழமையாக வெட்டுப்புள்ளி கணிப்பிடும் முறையை விட இம்முறை வித்தியாசமான முறையில் வெட்டுப்புள்ளி கணக்கிடப்பட்டதால் தாம் பெரிதும் பாதிக்கப்பட்டதாக தென்பகுதி மாணவர்கள் எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர்.

அதேவேளை — தமிழ் மாணவர்களும் பாதிக்கப்பட்டுள்ளதாக அரசுக்கு எடுத்துக் கூறப்பட்டுள்ளது.

தற்போது வெளியாகியுள்ள வெட்டுப்புள்ளி விவரத்தில் சிலமாற்றம் செய்வதுகுறித்து பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு ஆராய்ந்து வருவதாகவும் தெரிவிக்கப்பட்டது. (ஒ-3)

## மகளிர் தின போட்டிகள்

யாழ்ப்பாணம், பெப். 25

அனைத்துலக மகளிர் தினத்தையொட்டி யாழ். மாவட்ட கூட்டுறவுச் சபை, பாடசாலை மாணவர்கள் மற்றும் சங்க அங்கத்துவ மகளிர் ஆகியோர் இடையே பேச்சு, கட்டுரைப் போட்டிகளை நடத்தவுள்ளது.

போட்டிகள் எதிர்வரும் மார்ச் மாதம் 12 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெறும். [ஒ-14]

## கருத்தரங்கு

யாழ்ப்பாணம், பெப். 25

அகில இலங்கை சர்வமத யோகாசன ஸ்தாபனத்தினரால் நடத்தப்படும் மாதாந்தர யோகாசனக் கருத்தரங்கு நாளை ஞாயிற்றுக்கிழமை பி. ப. 3-30 மணியளவில் நல்லூர் திவ்ய ஜீவன சங்க மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இக்கருத்தரங்கில் யோகாசன நிபுணர்கள் பலரது கருத்துரைகளும், செய்முறை விளக்கப்பயிற்சியும் இடம் பெறும். [ஒ-5]

பிரச்சினைக்கு தீர்வுகாண

# தேசிய அரசாங்கம் அமைக்க வேண்டும்

## ஐ. தே. கட்சி எம். பி. வலியுறுத்து

கொழும்பு, பெப். 25

வடக்கு – கிழக்குப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண தேசிய அரசாங்கம் ஒன்றை அமைக்க வேண்டும் என்று ஐ. தே. கவின் தலைவர்களில் ஒருவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான சுசில் முனசிங்க வலியுறுத்தியுள்ளார்.

தென்னிலங்கையில் வாழும் சிங்கள மக்கள் நீண்டகாலமாக இருந்து வரும் இனப் பிரச்சினைக்கு பொருத்தமான தீர்வொன்றினைக் காண வேண்டிய அவசியத்தையும், முக்கியத்துவத்தையும் உணர்ந்துள்ள இந்த வேளையில் —

பெரும்பான்மை சிங்கள இன மக்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து இந்த இனப் பிரச்சினைக்கு சமாதானத் தீர்வு ஒன்றைக் காண முயற்சிக்க வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார்.

அவர் தனது உரையில் இனப்பிரச்சினை தொடர்பாக எடுக்கப்படும் எந்தவொரு தீர்மானமும் தற்காலிகமாகவன்றி, நிரந்தரமானதாக இருக்க வேண்டும் என்பதனையும், அது எதிர்காலச் சந்ததி என்றும் சமாதானமாக வாழ வழி செய்ய வேண்டும் என்பதனையும் வலியுறுத்திப் பேசினார். (ஒ-5)

## மணமாகாத பெண்களுக்கும் பிரசவ லீவு

கொழும்பு, பெப். 25

திருமணமாகாத கர்ப்பிணிப்பெண் ஊழியர்களுக்கும் மூன்று மாத கால பிரசவ லீவு வழங்குவது என்று அமைச்சரவை தீர்மானித்துள்ளது.

இப்பிரசவ விடுமுறை திருமணமான பெண்களுக்கே இப்போது வழங்கப்பட்டு வருகிறது. (இ-எ)

# விஜயவின் ஒற்றுமைகொள்கையை நான் செயற்படுத்திவருகிறேன்

## நினைவு வைபவத்தில் சந்திரிகா

கொழும்பு, பெப். 25

"அமரர் விஜயகுமாரதுங்க கொலை, கொள்ளை, மோசடி, பகற்கொள்ளை ஆகியவற்றை வெறுத்தார். நாட்டின் சகல இனத்தவர்களும் ஒற்றுமையாக இருக்க வேண்டும் என விரும்பினார் இதனை நான் இப்போது செய்து வருகின்றேன்"

கடந்த 16ஆம் திகதி விஜயகுமாரதுங்கா நினைவு மன்றத்தால் அவரின் 7ஆவது நினைவு தினத்தை முன்னிட்டு கொழும்பு- நீர்கொழும்பு 18ஆவது மைல் கல்லிற்கு அருகில் நடத்தப்பட்ட அவரின் அஸ்தியை சமாதியில் வைக்கும் வைபவத்தில் உரையாற்றிய பொழுது ஜனாதிபதி சந்திரிகா இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் கூறியதாவது—

இந்த நாட்டில் கொடூர யுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவரும் நோக்கில் சமாதான தூதனாக விஜய யாழ்ப்பாணம் சென்றார் மக்கள் அடக்கி ஒடுக்கப்பட்டிருந்த வேளையில் வீறுகொண்டு மக்களுக்காக ஐ. தே. க. அரசாங்கத்தை எதிர்த்துப் போராடினார்— என்றார்.

### ரூ. 75 லட்சம் செலவில் [illegible] ஆஸ்பத்திரி

இதற்போது விஜயகுமாரதுங்கவின் சமாதி அமைந்திருக்கும் காணியில் சுமார் 75லட்சம் ரூபா செலவில் 50 படுக்கை வசதிகளைக் கொண்ட ஆஸ்பத்திரி ஒன்றை அமைக்க விஜயகுமாரதுங்க ஞாபகார்த்த மன்றத்தினர் தீர்மானித்துள்ளனர்.

இதற்காக ஜனாதிபதி திருமதி சந்திரிகா தனது சொந்தப்பணத்தில் 5லட்சம் ரூபாவை நன்கொடையாக வழங்கி இருக்கிறார். (ஏ)

# உலகில் வயது கூடிய பெண் பிரான்சில்

## பிறந்தநாள் கொண்டாடினார்

கொழும்பு, பெப். 25

உலகில் ஆக வயது கூடிய பிரெஞ்சுப் பெண் தனது 120 ஆவது பிறந்த தினத்தை கடந்த செவ்வாய்க் கிழமை கொண்டாடினார்.

கின்னஸ் சாதனைப் புத்தகத்தின்படி பெண் எவரும் இந்த உலகில் 120 வயது வரை வாழ்ந்தது இல்லை என்று தெரிவிக்கப்படுகிறது.

ஜப்பானைச் சேர்ந்த ஆணான சிகெச்சியோ இஸுமா என்பவர் 120 ஆண்டுகளும் 237 தினங்களும் வாழ்ந்து 1986இல் மரணமானார்.

இப்போது 120வயது வரை வாழ்ந்து சாதனை படைத்துள்ள இப்பெண்ணின் பெயர் ஜீன் காமன்ற் ஆகும்.

கடந்த திங்கட்கிழமை டெலிவிஷன் பேட்டி ஒன்றில், "கடவுள் என்னை மறந்து விட்டார். கடவுளுக்கு என்னை நன்றாகத் தெரியும் என்னைக்காண அவர் அவசரப்படவில்லை" — என்று காமன்ற் தெரிவித்தார்.

'மரணத்தை எதிர்பார்த்து நான் காத்திருக்கின்றேன்'— என்று கூறும் இவர் பிறந்து ஒரு வருடம் கழித்து அலெக்ஸாண்டர் கிரகாம்பெல் தொலைபேசியைக் கண்டுபிடித்தார்; நான்கு ஆண்டுகள் கழித்து எடிஸன் மின்சார பல்பைக் கண்டுபிடித்தார்.

100 ஆவது வயது வரை சைக்கிள் சவாரியில் ஈடுபட்டு வந்த இவர் மூன்று ஆண்டுகளுக்கு முன்புதான் புகை பிடிப்பதைக் கைவிட்டார். ஐம்பது ஆண்டுகள் இல்வாழ்க்கையை அனுபவித்த இவர், பிந்திய ஐம்பது ஆண்டுகளாக விதவையாக வாழ்ந்து வருகின்றார்.

இவரது ஒரே புதல்வி 1934இல் மரணமானார். 1963இல் இவரின் ஒரே ஒரு பேரனும் காலமானார்.

இன்னும் தமது கன்னங்களுக்கு பவுடர் பூசி வரும் இவரின் பிறந்த தி+தி 21—02—1875.

பிரான்ஸின் தெற்குப்பகுதியில் ஆர்லெஸ் பகுதியில் தமது வீட்டில் முச்சக்கர வண்டியில் இவர் தற்சமயம் நடமாடி வருகிறார். (இ-எ)

## பாடசாலை நிகழ்ச்சிகள்

யாழ். அராலி சரஸ்வதி மகாவித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டிகள் இன்று பிற்பகல் 2 மணியளவில் கல்லூரி அதிபர் திருமதி எஸ். அம்பலவாணர் தலைமையில் நடைபெறும்.

யாழ். கல்வி வலயம் இரண்டின் உதவி கல்விப் பணிப்பாளர் திரு. வே. மகேந்திரன் பிரதமவிருந்தினராகக் கலந்து கொள்வார். (க-5-161)

★ ★ ★

உடுவில், சண்டிலிப்பாய் கல்விக்கோட்ட பாடசாலை ஆங்கில ஆசிரியர்களுக்கான கருத்தரங்கு ஒன்று இராமநாதன் கல்லூரியில் இன்று சனிக்கிழமை நடைபெறும் என கல்வி வலயம் இரண்டின் கல்விப்பணிப்பாளர் திரு. க. கந்தசாமி அறிவித்துள்ளார். (ஐ-152)

★ ★ ★

சித்தன்கேணி வட்டுக்கோட்டை இந்துக்கல்லூரி வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று சனிக்கிழமை பிற்பகல் 1.45 மணிக்கு நடைபெறும்

அதிபர் திரு. நா. ஜெபநாயகம் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் வலி. மேற்கு பிரதேச செயலாளர் திரு. கா. சந்திரராசா பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார். (க-14-161)

★ ★ ★

சங்கானை, சண்டிலிப்பாய், தெல்லிப்பளைக் கோட்டப் பாடசாலைகளிடையேயான கோட்டமட்ட உடற்பயிற்சிப் போட்டிகள் இன்று சனிக்கிழமை காலை 9 மணிக்கு மானிப்பாய் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெறும், (க-14-90)

★ ★ ★

இமையாணன் மகாவித்தியாலய வருடாந்த இல்லமெல்வல்லுநர் போட்டி இன்று பிற்பகல் 2 மணிக்கு சலாம் விளையாட்டரங்கில் அதிபர் திரு. ம. குட்டித்தம்பி தலைமையில் நடைபெறும். இந்நிகழ்வில் வலயம் IIஇன் கல்விப் பணிப்பாளர் திரு. க. கந்தசாமி முதன்மைவிருந்தினராகக் கலந்துகொள்வார். [ஒ-14]

★ ★ ★

கச்சாய் அ. த. க. பாடசாலை வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டிகள் இன்று சனிக்கிழமை பிற்பகல் 1-30 மணிக்கு பாடசாலை அதிபர் திரு அ. அகிலதாஸ் தலைமையில் நடைபெறும். தென்மராட்சி கல்விக்கோட்ட உதவிக் கல்விப் பணிப்பாளர் திரு. இ. கணேசன் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார். [ஒ-14-117]

★ ★ ★

நெல்லியடி ம. ம. வித்தியாலய வருடாந்த மெய்வல்லுநர் போட்டி இன்று சனிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு பாடசாலை விளையாட்டரங்கில் அதிபர் திரு. எஸ். சிற்றம்பலம் தலைமையில் நடைபெறும். [ஒ-14-155]

★ ★ ★

ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தியாலய வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று சனிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு ஆவரங்கால் சிவன் வீதி மைதானத்தில் அதிபர் திரு. எஸ் முத்துக்குமாரசுவாமி தலைமையில் நடைபெறும். இந்நிகழ்வில் கோப்பாய் பிரதேச செயலக கணக்காளர் திரு. எம். விஜயரகுநாதன் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார். [ஒ-15-155]

யாழ். போதனா வைத்தியசாலை

# முறிவு-நெரிவு தொழிற் தளம் தொடர்ந்து ஸ்தம்பித நிலை

## ஊனமுற்றோர் பெரும் பாதிப்பு

யாழ். போதனா வைத்தியசாலையில் உள்ள முறிவு நெரிவுத் தொழிற் தளம் மூலப்பொருள்கள் இல்லாத காரணத்தால் தொடர்ந்து முழு அளவில் இயங்கமுடியாது ஸ்தம்பித நிலையிலேயே இருந்து வருகிறது.

தற்போது ஓரளவு சுமுக நிலை தோன்றி இருப்பதால், இந்த தொழிற் தளம் இயங்கக் கூடிய நிலைமை உருவாகும் என்று பலரும் எதிர்பார்த்திருந்தார்கள்.

எனினும் கடந்த ஐந்து வருட காலமாக இந்த தொழிற் தளம் எந்த நிலையில் இருந்ததோ அதே நிலையிலேயே இன்னமும் இருந்து வருவதாகத் [illegible] கிறது.

கடந்த கால [illegible] நடவடிக்கைகள், விபத்துகள் ஆகியவற்றால் ஊனமுற்றவர்கள் முறிவு நெரிவுத் தொழிற்சாலைக்கு மூலப் பொருள்கள் வந்து சேராததால் சப்பாத்து, ஊன்றுகோல் போன்றவற்றைப் பெறமுடியாதநிலையில் இருந்து வரு[illegible] முற்றோர்கள் [illegible]

இந்த உபகரணங்களைத் தயாரிக்கும் தொழிற் தளம், வடபகுதி முழுவதுக்கும் யாழ். போதனா வைத்தியசாலையில் மட்டும் அமைந்திருப்பது குறிப்பிடத்தக்கது.

அத்துடன் இதனை முழுமையாக இயங்க வைக்கக் கூடிய ஒரு தொழில்நுட்பவியலாளர் மற்றும் பயிற்றப்பட்ட தொழிலாளர்கள் ஆகியோரை இத்தொழிற் தளத்தில் பணியாற்றுவதாக தெரிவிக்கப்படுகிறது. [இ-15]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்கள்

## திருமதி கனகம்மா செல்லையா

மண்டைதீவு 7 ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த கனகம்மா செல்லையா நேற்று (24 - 2 - 95) காலமானார்.

அன்னார் செல்லையாவின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற வைத்திலிங்கம் - செல்லாச்சி தம்பதிகளின் அன்பு மகளும், சின்னத்தம்பி - வள்ளியம்மை தம்பதிகளின் அன்பு மருமகளும், கமலநாயகி, குமாரராசா [விஸ்வமடு], புஸ்பராணி [கொழும்பு], கேதீஸ்வரி, ஸ்ரீகாந்தன், கருணைநாதன், வசந்தமலர், மீரா, கமலநாதன் ஆகியோரின் அருமைத் தாயாரும், சனகராசா, பராசக்தி, நல்லைநாயகம் [சுவிஸ்], ராஜமனோகரன் ரோசாதேவி, செல்வவதி ஆகியோரின் அன்பு மாமியும், காசிராசா, சேதிராசா, காலஞ்சென்ற சிங்கராசா மற்றும் நாகராசா ஆகியோரின் அருமைச் சகோதரியும், இளந்திரயன், கமலினி, குகதாஸ், ஆயந்தன், நிசாந்தி, கஜனி, சுதா, ரமேஸ், நிருசன், சங்கீதா ஆகியோரின் அன்பு பேர்த்தியும், புங்குடுதீவு 10 ஆம் வட்டாரத்தை சேர்ந்த செல்வரெத்தினம் - தவமணியின் சம்மந்தியுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று 25- 2- 95 பிற்பகல் 2 மணியளவில் துண்டி மயானத்தில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்;
சி. செல்லையா
[கணவர்]
பிள்ளைகள்

54/66, கொழும்புத்துறை றோட்,
சந்தனமாதா கோவில் முன் ஒழுங்கை,
பாண்டியன்தாழ்வு,
சுண்டிக்குழி (35383)

## சின்னையா சொக்கலிங்கம்

(ஆச்சாரியார்)

வண்ணார்பண்ணை கேசாவில் பிள்ளையார் கோவிலடியைச் சேர்ந்த சின்னையா சொக்கலிங்கம் ஆச்சாரியார் 24.02-95 வெள்ளிக்கிழமை காலை சிவபதம் அடைந்துவிட்டார். இவர் காலஞ்சென்ற சின்னையா சின்னப்பிள்ளை தம்பதிகளின் அன்புப் புதல்வரும், காலஞ்சென்ற காமாட்சி அம்மாளின் அன்புக் கணவரும், இரத்தினம், தம்பிராசா (மெக்கானிக்) ஆகியோரின் அன்புச் சகோதரரும்,

கலாசோதி, தவக்குமார் [அமெரிக்கா], சிவசோதி, அருள்குமார் [டீசல் மெக்கானிக்], அன்புகுமார் [ஜேர்மனி], ஆனந்தகுமார் [கனடா], மோகனகுமார் [சுவிஸ்], தேவகுமார் [கனடா] ஆகியோரின் அன்புத் தந்தையும், சாந்தகுமார், ஞானசேகரம், திலகவதி [அமெரிக்கா], ஜெயவதனி, கலாவதனி [ஜேர்மனி] ஆகியோரின் அன்பு மாமனாரும், நிசாந்தன், நிசாந்தினி, நிவேந்தன், நிதர்சன், முகிந்தன், தீபிகா, தகூன், மாதங்கி, மாதுரி ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை விவரம் பின்னர் அறிவிக்கப்படும், இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்,

தகவல்
சொ. அருள்குமார் (மகன்)
(டீசல் மெக்கானிக்)

வண்ணார்பண்ணை (35373)

## கிட்டினர் - கமலகுமார்

ஈவினை புன்னாலைக் கட்டுவனைச் சேர்ந்த கிட்டினர் கமலகுமார் நேற்று [24 - 2 - 95] காலமானார். இவர் அனற் நிருபாவின் [ஆசிரியை - அச்செழு மெதடிஸ்ற் பாலர் பாடசாலை] அன்புக் கணவரும், ஜோண் நிமல்ராஜ் [பாலர் பாடசாலை மாணவன் - உடுவில் மகளிர் கல்லூரி], அன்றூ நிதர்சன் ஆகியோரின் அன்புத் தகப்பனும், காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை கிட்டினர், பூபதி தம்பதிகளின் அன்பு மகனும், ம. அருளானந்தம [பாதுகாப்பு ஊழியர் - மக்கள் வங்கி, நெல்லியடி], அருட்செல்வம் தம்பதிகளின் அன்பு மருமகனும், நிரோஜினி (யாழ் பல்கலைக்கழகம் - 1ஆம் ஆண்டு கலைப்பீட மாணவி], நிமாலினி [மாணவி - உடுவில் மகளிர் கல்லூரி - ஆண்டு 11] ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று பிற்பகல் 4 00 மணிக்கு அவரது இல்லத்திலிருந்து நல்லடக்கத்திற்காக புத்தூர் மெதடிஸ்த சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல் :
மனைவி

ஈவினை தெற்கு,
புன்னாலைக்கட்டுவன். [35384]

## சின்னத்துரை சிவசுப்பிரமணியம்

[பாலா]

(உரும்பிராய் சிதம்பர சுப்பிரமணிய சுவாமி கோவில் பரிபாலன சபை உறுப்பினர்)

உரும்பிராய் தெற்கைச் சேர்ந்த காலம் சென்ற சின்னத்துரை இராசம்மாவின் இளையமகனும், கோண்டாவில் கிழக்கு முத்துக்குமாரு சிவஞானம்மா [கனடா] ஆகியோரின் மருமகனுமான சிவசுப்பிரமணியம் (21-2-95) செவ்வாய்க்கிழமை காலை சிவபதம் அடைந்தார்.

இவர் தேவமனோகரியின் அன்புக் கணவரும், றாகவன் (கனடா), மதிசுதன் (கனடா), மாதவன் [கனடா], கேசவன் (ஜேர்மனி), ரமேஸ் ஆகியோரின் அன்புத்தந்தையும், ஆனந்தி (கனடா), மகாராணி (கனடா) ஆகியோரின் மாமனும், விசுவலிங்கம், ராஜேஸ்வரி, அன்னலட்சுமி, சத்தியதேவி காலஞ்சென்ற தங்கரத்தினம், மகேஸ்வரி ஆகியோரின் சகோதரனும், குட்டித்தம்பி, நடராசா, விமலராணி, செல்வசரஸ்வதி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் நாளை 26-2-95 ஞாயிற்றுக்கிழமை காலை 8. 00 மணிக்கு நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக 10 மணிக்கு வேம்பன மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர் நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்
சி. தேவமனோகரி
(மனைவி)

சிவகுல வீதி,
உரும்பிராய் தெற்கு,
உரும்பிராய் [35382]

இப்பத்திரிகை நியு உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிற்றெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி 292/2 இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 25- 02 - 1995 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது

# அவுஸ்திரேலிய அரசாங்கம் வழங்கும் புலமைப்பரிசில்

அவுஸ்திரேலியாவில் பட்டப் படிப்பை மேற்கொள்ள விரும்பும் மாணவர்களுக்கு அவுஸ்திரேலியா அரசு புலமைப் பரிசில்களை வழங்க முன்வந்துள்ளது.

18 வயதுக்கும் 25 வயதுக்கும் இடைப்பட்ட ஜி. சி. ஈ. (உயர்தர) பரீட்சையில் ஆகக் குறைந்தது 300 மொத்தப் புள்ளிகளைப் பெற்றவர்கள் இந்த புலமைப் பரிசிலுக்கு விண்ணப்பிக்க முடியும்.

மருத்துவம், பொறியியல், கொம்பியூட்டர், பொருளியல், வர்த்தகம், வர்த்தக முகாமைத்துவம், சட்டம், கணக்கியல் போன்ற துறைகளில் பட்டப்படிப்பை மேற்கொள்ள விரும்புவோருக்கு புலமைப் பரிசில்கள் வழங்கப்படும்.

இந்தப் புலமைப் பரிசில்களில் 50 விதமானவை பெண்களுக்கு வழங்கப்படவிருக்கின்றன.

இதற்கான விண்ணப்பங்கள் ஏப்ரல் மாதம் 15ஆம்திகதிக்கு முன்னர் கொழும்பில் உள்ள அவுஸ்திரேலியா தூதரகத்துக்கு அனுப்பப்பட வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-3)

## தொழில் வங்கி விண்ணப்ப திகதி நீடிப்பு

தொழில் வங்கியில் பதிவு செய்வதற்கான விண்ணப்பப் படிவங்கள் அடுத்த மாதம் (மார்ச்) 10 ஆம் திகதி முதல் தமிழீழ நிர்வாக சேவை செயலகத்தில் விநியோகிக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த விண்ணப்பப் படிவங்கள் இன்று சனிக்கிழமை முதல் விநியோகிக்கப்படும் என முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தது.

தவிர்க்க முடியாத காரணத்தினால் அது பிற்போடப்பட்டிருப்பதாக தமிழீழ நிர்வாகசேவை செயலக செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

### பாதை---

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

விடுதலைப் புலிகள் அரசை வற்புறுத்தி வந்தது தெரிந்ததே.

ஆனால் அரசு தற்போது வெளியிட்டுள்ள அறிவிப்பில் முகாமை வாபஸ் பெறுவது சம்பந்தமான புலிகளின் கோரிக்கைக்கு சாதகமான பதில் கிடைக்கவில்லை.

மாறாக, முன்னணி முகாம்களை சுமார் ஐநூறு மீற்றர் தூரம் பின்னோக்கி நகர்த்துவது பற்றியே பிரஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது.

— இவ்வாறு ஐநூறு மீற்றருக்கு படையினரை பின்னோக்கி நகர்த்தி அதன் பின்னர் பாதையைத் திறந்துவிடும் திட்டத்தை ஏற்ற முடியாது என்று ஏற்கனவே அரச தூதுக் குழுவிடம் விடுதலைப் புலிகள் திட்டவட்டமாகத் தெரிவித்து விட்டதும் குறிப்பிடத்தக்கது. [உ-3]

### இணக்கம்...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

மற்றும் நல்லெண்ணத்தின் அடிப்படையில் நடத்தப்படுகின்றன என்றும் அவர் கூறினார்.

மோதல்தவிர்ப்பு ஒப்பந்தம் வெற்றிகரமாக செயல்பட்டு வருகின்றது.

மோதல் தவிர்ப்புக்காலத்தில் விடுதலைப் புலிகள் இயக்கத்தினர் பங்கர்களை அமைத்து வருகின்றார்கள் என்ற பத்திரிகைச் செய்திகளை பிரதி அமைச்சர் மறுத்தார்.

சமாதானத்துக்கு விரோதமான சில பிரிவினரே இத்தகைய பிரசாரத்தைக் கட்டவிழ்த்து விட்டுள்ளனர்என்றும் அவர் கூறினார்,

விடுதலைப்புலிகள் இயக்கத்தினர் முன்னைய அரசுடன் நடத்திய பேச்சுக்களுக்கும் தற்போதைய அரசு நடத்தும் பேச்சுகளுக்கும் இடையே தெளிவான வித்தியாசம் இருப்பதாகவும் அவர் கூறினார்.

முன்னையகாலத்தில் விடுதலைப்புலிகள் தம்மைப்பலப்படுத்திக்கொள்ள போதுமான வாய்ப்புக்கள் இருந்தன. ஆனால் தற்போதைய சூழ்நிலையில் அத்தகைய வாய்ப்புக்கள் இல்லை என்றும் பிரதி அமைச்சர் தெரிவித்தார்.

முன்னைய அரசுடன் பேச்சுக்களை நடத்திக் கொண்டிருந்த வேளையில் ஆயுதங்கள் வெடி- மருந்து வாகனங்கள் முதலியவற்றைக் கொண்டுவர விடுதலைப்புலிகளுக்கு அனுமதி வழங்கப்பட்டது. பேச்சுவார்த்தைகள் ஒளிவுமறைவாகவே நடத்தப்பட்டன. நாடாளுமன்றத்தில் அவை பற்றி எவ்வித விவரங்களும் தெரிவிக்கப்படவில்லை.

இத்தகைய கடந்தகாலத் தவறுகளுக்கு தற்போதைய அரசாங்கம் இடமளிக்கமாட்டாது என்றும் பிரதி அமைச்சர் தெரிவித்தார். (ஐ-எ)

### பதவி...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

சோனியா காந்தி சுக்குநூறாகக் கிழித்து எறிந்தார் என்றும்—

கட்சித்தலைவர் பதவியைத் தொடர்ந்து வகிக்குமாறு ராவை சோனியா காந்தி வலியுறுத்தினார் என்றும் —

தமிழகப் பத்திரிகைகள் சிலசெய்திகள் வெளியிட்டன.

இந்தச் சம்பவத்தின் பின்னரே முன்னாள் அமைச்சர் அர்ஜுன் சிங்கை கட்சியிலிருந்து வெளியேற்றும் கடும் நடவடிக்கையை ராவ் எடுத்தார் என்றும் தெரிவிக்கப்பட்டது. [உ-3]

### யாழ்.---

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

இங்கு வந்து கடமையைப் பொறுப்பேற்பார் எனத் தெரிவிக்கப்பட்டது.

யாழ். அலுவலகத்தில் தற்போது பணிபுரியும் திரு. மார்ட்டின் என்பவர் இங்கிருந்து இடமாற்றம் பெற்றுச் செல்லவுள்ளார். அவரது இடத்துக்கே புதிய பிரதிநிதி நியமிக்கப்படவுள்ளார்.

### இலங்கைக்கு---

[1ஆம் பக்கத் தொடர்ச்சி]

உடன்பாடு ஒன்றைக்காணும் பட்சத்திலேயே உதவும் நாடுகளிடமிருந்து பெரிய அளவில் நிதி உதவியை எதிர்பார்க்க முடியும் என்றும் அவர் தெரிவித்தார்.

ஏப்ரலுக்குப் பின்னரும் சமாதான உடன்பாடு காணப்படும் பட்சத்திலும் நாட்டை புனர்நிர்மாணம் செய்வதற்கு தேவையான உதவியை இலங்கை பெற்றுக் கொள்ள முடியும் என்றும் அவர் கூறினார்.

1993 ஆம் ஆண்டு உதவும் நாடுகள் இலங்கைக்கு 850 மில்லியன் அமெரிக்க டொலர்களை வழங்கின.

ஜப்பான் மட்டும் 400 மில்லியன் டொலர்களை வழங்கியது.

1992 இல் உதவும் நாடுகள் 800 மில்லியன் அமெரிக்க டொலர்களை இலங்கைக்கு வழங்கின. அத்தொகையில் அரைப்பங்குக்கு அதிகமாக ஜப்பானின் உதவி அமைந்தது. (ஐ-எ)

---

யாழ். மாவட்ட

## வெதுப்பக உரிமையாளர் சங்க அவசர பொதுக்கூட்ட

# அறிவித்தல்

காலம்: 26 - 02 - 1995 ஞாயிற்றுக்கிழமை
நேரம்: முற்பகல் 10 மணி
இடம்: தலைமைச் செயலகம்
விடயம்: மா விநியோகமும், நாம் எதிர்நோக்கும் பிரச்சினையும்

அங்கத்தவர் அனைவரும் தவறாது சமுகமளிக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

தலைவர்,
யா. மா. வெ. உ. சங்கம்

183, ஆடியபாதம் வீதி,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம். [illegible]

## கண்டெடுத்த பொருள்கள்

யாழ்ப்பாணம், பெப். 25

வல்லை முனியப்பர் கோவிலுக்கு அருகில் கண்டெடுக்கப்பட்ட சில பொருள்களும், ஒரு தொகைப் பணமும் பருத்தித்துறை தமிழீழ மாவட்ட நீதிமன்றில் ஒப்படைக்கப்பட்டிருப்பதாகவும் —

உரியவர்கள் தகுந்த ஆதாரம் காட்டி அவற்றைப் பெற்றுக் கொள்ளலாம் என்றும் நீதிமன்றப் பதிவாளர் தெரிவித்துள்ளார். (ஐ)

## உதைபந்தாட்ட பயிற்சி வகுப்பு

யாழ்ப்பாணம், பெப் 25

உதைபந்தாட்டப் பயிற்சி வகுப்புகள் இன்றும் நாளையும் சென். பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளன.

பயிற்சி வகுப்புகள் இன்று பிற்பகல் 2 மணிக்கும், நாளை ஞாயிறு காலை 8 மணிக்கும் ஆரம்பமாகும்

வடக்கு கிழக்கு மாகாண விளையாட்டுத்துறை உதவிப் பணிப்பாளர் திரு மு. ஜீவரத்தினம் இப்பயிற்சி வகுப்புகளை நடத்துவார். (ஐ)

## குடும்பத்துக்கு 4 லீற்றர் மண்எண்ணெய்

''மாஹோ'' கப்பலில் எடுத்துவரப்பட்டுள்ள மண் எண்ணெய் பங்கீட்டு அடிப்படையில் பொதுமக்களுக்கு விநியோகிக்கப்படவுள்ளது.

குடும்பம் ஒன்றுக்கு நான்கு லீற்றர் வீதம் ப. நோ. கூ. சங்கங்கள் மூலமாக மண் எண்ணெயை விநியோகிக்க நடடிவக்கை எடுக்கப்பட்டுள்ளது. (ஐ 4)

## வெளிநாட்டு பிரதிநிதிகள் யாழ். வருகை

யாழ்ப்பாணம், பெப். 25

அமெரிக்காவில் உள்ள ''ஒப்பரேஷன் யு. எஸ். ஏ'' என்னும் அரச சார்பற்ற நிறுவனத்தைச் சேர்ந்த பிரதிநிதிகள் இருவர் யாழ்ப்பாணம் வந்துள்ளனர்.

திரு றிச்சேட் வெல்டென், திரு. ஜொனதன் எஸ்றின் ஆகிய இருவருமே கிளாலியூடாக நேற்று யாழ். வந்தடைந்தனர்.

இவர்கள் இருவரும் நேற்று யாழ். ஆஸ்பத்திரியைச் சென்று பார்வையிட்டனர்.

## முஸ்லிம் காங்கிரஸில் மொகைதீன்!

முஸ்லிம் ஐக்கிய விடுதலை முன்னணியின் செயலாளர் நாயகம் எம். ஐ. எம். மொகைதீன் நேற்று ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸில் இணைந்து கொண்டார்.

முஸ்லிம் காங்கிரஸின் தலைவரும், அமைச்சருமான எம். எச். எம். அஷ்ரப்பும், முஸ்லிம் ஐக்கிய விடுதலை முன்னணியின் செயலாளர் நாயகமும் நேற்று கூட்டறிக்கை ஒன்றை வெளியிட்டனர் என்று அறிவிக்கப்பட்டது ஐ 3)

### பூநகரி---

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

முடிவை எடுத்துள்ளது.

இந்த நடவடிக்கைக்கு மேலும் வசதியாக இருக்கத்தக்க வகையில் முன்னணி பாதுகாப்பு அரண்கள் தற்போதைய நிலைகளிலிருந்து மேலும் 500 மீற்றருக்கு அப்புறப்படுத்தப்படும்.

வடபகுதி மக்களின் கஷ்டங்களை குறைப்பதற்காக அரசாங்கம் விடுத்துள்ள மற்றுமொரு நடவடிக்கை இதுவாகும்.

வடபகுதிக்கு இராணுவ சாதனங்கள் தவிர்ந்த உணவுப் பொருள்களும், மருத்துவ உபகரணங்களும், மருந்துகளும் அனுப்புவதற்கு இது உதவியாக இருக்கும்.

இம்மாதம் 20 ஆம் திகதி ஆரம்பிக்கப்படவிருந்த வடபகுதி புனருத்தாரண நடவடிக்கைகளுக்கு விடுதலைப் புலிகளிடமிருந்து சாதகமான பதில் இன்னும் கிடைக்கவில்லை.

பொதுமக்களின் பாவனைக்காகவும், வாகனப் போக்குவரத்துக்காகவும் இந்த இரண்டு பாதைகளும் திறந்துவிடப்படுவது வடபகுதி மக்களின் வாழ்க்கை நிலையை மேம்படுத்தும்.

இந்தப் பாதைகளில் சுலபமாக போக்குவரத்து நடைபெறுவதற்கு அனுமதிக்கக்கூடிய வகையில் விடுதலைப் புலிகள் அவசரமான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் — என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ-3-9)

## உரமானியம் அதிகரிப்பு

விவசாயிகளுக்கு வழங்கப்படவுள்ள உரமானியம் 500 ரூபாவில் இருந்து 700ரூபாவாக அதிகரிக்கப்படவுள்ளது.

அரை ஏக்கர் முதல்3 ஏக்கர் வரைநிலத்தில் விவசாயம் செய்பவர்களுக்கே இந்த உரமான்யம்வழங்கப்படவுள்ளது.

சர்வதேச சந்தையில் உரவகைகளின் விலை அதிகரித்துள்ளதை அடுத்து உரமான்யம் அதிகரிக்கப்படுகிறது. (இ-எ)

## பரிசளிப்பு விழா

அல்வாய் றோமன் கத்தோலிக்க வித்தியாலய வருடாந்த பரிசளிப்பு விழா இன்று சனிக்கிழமை பிற்பகல் அதிபர் திரு. ஆ. வடிவேலு தலைமையில் நடைபெறும். (ஐ-173)

## 1994/95 கல்வி ஆண்டுக்கான வெட்டுப் புள்ளிகளினால் பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கான அழைப்பு

வெட்டுப்புள்ளிகளை மீளாய்வு செய்யக்கோரி ஜனாதிபதிக்கு மகஜர் ஒன்று அனுப்பப்பட உள்ளது. அம் மகஜரில் கையொப்பம் இடுவதற்கு உயிரியல்துறை மாணவர்கள் பின்வரும் இடங்களுக்கு திங்கள் [27 - 2 - 95] அன்று அழைக்கப்படுகின்றனர்.

வலிகாமத்தில் — புதிய விஞ்ஞானக் கல்வி நிறுவனம் (எழிலகம் முன்பாக)
— காலை 9 மணிக்கு
வடமராட்சியில் — நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம்.
— மாலை 3 மணிக்கு

பாதிக்கப்பட்ட மாணவர் குழு

[35369]

# முக்கிய அறிவித்தல்

கொக்குவில் மேற்கு
மஞ்சவனப்பதி முருகன் ஆலய
மகாசபைக் கூட்டம்

இடம்:- ஆலய மண்டபம்
காலம்:- 12. 3. 95 ஞாயிற்றுக்கிழமை
பி.ப 3 00 மணி

விடயம்:- ஆலய நகல் யாப்பை அங்கீகரித்தல்.

அங்கத்தவர்கள் யாவரும் தவறாது கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

குறிப்பு:- மேற்படி நகல் யாப்பு ஆலய விளம்பரப் பலகையில் அங்கத்தவர்களின் பார்வைக்காக வைக்கப்பட்டிருக்கும்.

ஆலய சேவையில்

அ பத்மநாதன்
கௌரவ செயலாளர்,
நிர்வாக சபை.

மஞ்சவனப்பதி முருகன் ஆலயம்,
கொக்குவில் மேற்கு,
கொக்குவில். (35386)

# மரண அறிவித்தல்கள்

## திருமதி சுப்பிரமணியம் நல்லம்மா

இடைக்காட்டை பிறப்பிடமாகவும், அத்தியடியை வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் நல்லம்மா நேற்று [24-2-95] வெள்ளிக்கிழமை சிவபதமடைந்துவிட்டார்.

இவர் காலஞ்சென்ற கதிரவேலுப்பிள்ளை சுப்பிரமணியத்தின் அன்பு மனைவியும், கதிரவேலுப்பிள்ளை [U.S.A ], சிவமுத்துலிங்கம் [ஜேர்மனி], சூரியப்பிரபா ஆகியோரின் பாசமிகு அன்னையும், நந்தாவதி [U.S.A.], தேவரஞ்சிதமணி [கொழும்பு] ஆகியோரின் அன்பு மாமியாரும், ரவீந்திரா [U S A ], ராஜேந்திரா [U.S.A.], மேரி [U.S.A ], ஜனகன், ஹபீசன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், மொரீன் கிறிஸ்ரோபர் [U.S A.], சாராலின்சே [U S.A ] ஆகியோரின் அன்புப் பூட்டியும், தெய்வானைப் பிள்ளை, காலஞ்சென்ற வேலாயுதபிள்ளை, இராசமணி ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற மாணிக்க இடைக்காடர், நமசிவாய இடைக்காடர் ஆகியோரின் ஒன்றுவிட்ட சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று [25-2-95] சனிக்கிழமை அத்தியடியில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று, தகனக்கிரியைக்காக பூதவுடல் பிற்பகல் 3 மணிக்கு கோம்பயன்மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

தகவல்:
சூரியப்பிரபா
(மகள்)

35, அத்தியடி புதிய வீதி,
யாழ்ப்பாணம். (35387)

## திருமதி அந்தோனிப்பிள்ளை மேரி மாகிரேட்

[இரத்தினம்]

யாழ்ப்பாணம் இல 18, புனித ஆசீர்வாதப்பர் வீதியை சேர்ந்த அ. மேரி மாகிரேட் 23-2-95 இல் கொழும்பில் காலமாகிவிட்டார்.

இவர் காலஞ்சென்ற அந்தோனிப்பிள்ளையின் அன்பு மனைவியும், யோசெவ் (ஆசிரியர் புனித பத்திரிசியார் கல்லூரி), பெனடிற் ஆஞ்சலோ (ஜேர்மனி), மேரி ஜசிந்தா (கொழும்பு), கிறிஸ்ரி அல்போன்ஸ் (Managing Director, Brighton College International Colombo — 6), ஆகியோரின் அன்புத்தாயாரும், வேர்ஜினி விஜயகுமாரி, ரேணுகா (ஜேர்மனி), ஜோர்ஜ் சமரக்கொடி [அமெரிக்கா] ஆகியோரின் அன்பு மாமியாரும், சரோன் ராஜ் (S. P. C), இவோன் அக்கினோஜி [H. F C], கிஷோன் [H. F. C], ரெச்சல் [ஜேர்மனி], றெபேக்கா (ஜேர்மனி), கொன்சலா (1. H. S), நெல்சன், கெனடி ஆகியோரின் பாசமிகு பேர்த்தியுமாவார்.

அன்னாரின் நல்லடக்கம் 26-2-95 இல் கொழும்பு 59/1, 5 th Lane, St. Benebicts mawatha, கொட்டாஞ்சேனையில் நடைபெறும் என்பதை உற்றார், உறவினர் நண்பர்களுக்கு அறியத்தருகின்றேன். ஆன்ம இளைப்பாற்றிக்காக ஜெப வழிபாடு இன்று [25-2-95] காலை 10. 30மணியளவில் எனது இல்லத்தில் நடைபெறும்.

தகவல்
அ. யோசெவ் (ஆசிரியர்)
(S. P. C)

40.கொழும்புத்துறை வீதி,
சுண்டுக்குளி,
யாழ்ப்பாணம். (35385)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org